

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli


நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 63 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 25 – வியாழக்கிழமை 12 அக்டோபர் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 63: Thiruvalluvar Year - 2054 - Purattasi 25 - Thursday 12 October 2023 - Madurai 12 Pages ₹ 5.00


## ‘பசுமைப் புரட்சியின் தந்தை’ - வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரில் விருதுகள்!

# தஞ்சை வேளாண் கல்லூரிக்கு - எம்.எஸ்.சுவாமிநாதன் பெயர்!

## சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.10.2023) சட்டமன்றப் பேரவையில், பசுமைப் புரட்சியின் தந்தை என்று போற்றப்படும் மறைந்த வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையில், தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்று பெயர் சூட்டப்படும் என்றும், வேளாண் அறிவியல் மாணவர்களுக்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் பெயரில் விருதுகள் வழங்கப்படும் என்றும் சட்டப்பேரவை விதி 110–ன்கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.



**சென்னை, அக். 12 -**

**வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையில், சட்டப் பேரவையில், நேற்று, விதி எண்.110ன்கீழ் சில அறிவிப்புகளை வெளியிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையில்,**

**“தஞ்சை வேளாண் கல்லூரிக்கு - ‘பசுமைப் புரட்சியின் தந்தை’ எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் பெயர் சூட்டப்படும்” என்றும், “தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இளம் வேளாண் அறிவியலில் பயிர்ப்பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெற்று முன்னிலை பெறும் மாணவருக்கு ‘டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன்’ பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும்” என்றும் அறிவித்தார்.**

**சட்டப்பேரவையில் நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரவை விதி 110ன்கீழ் ஆற்றிய உரை வருமாறு: -**

இந்திய ஒன்றியம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கும், இந்திய மக்களின் பட்டினிச் சாவைத் தடுப்பதற்கும் 1960களில் பசுமைப் புரட்சித் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியவரான மறைந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையில் விதி எண்.110இன்கீழ் அறிவிப்பை வெளியிடுவதில் நான் பெருமைப் படுகிறேன்.

### வேளாண் அறிவியலில் உலகளவில் புகழ் பெற்றவர்!

வேட்டைச் சமூகமாக இருந்த மனித இனம், வேளாண் தொழிலைத் தேர்ந்தெடுத்தது என்பது மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி என்பதுடன் அறிவியல் வளர்ச்சியின் அடையாளமும் ஆகும்.

வேளாண் அறிவியலை இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு ஏற்றவாறு பயன்படுத்தும் பல்வேறு ஆராய்ச்சிகளை வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டி உலகளவில் புகழ் பெற்றவர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள்.

தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் வேளாண் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு, வேளாண் ஆராய்ச்சி மையங்கள் அதிகளவில் உருவாக்கப்பட்டு, உணவு உற்பத்தியில் புரட்சியும், அதனை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதற்கான செயல்முறைத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது. இன்றளவிலும் இந்தியாவின் வெற்றிகரமான மாடலாக இருப்பது முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்து மாடல்தான். இந்தப் பங்களிப்பில் அறிவியலாளர் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் ஆலோசனைகளும் இணைந்திருக்கின்றன.

இன்று காலநிலை மாற்றம்தான் பெரிய பிரச்சினையாக மாறிக் கொண்டு இருக்கிறது. இதனை முன்கூட்டியே உணர்ந்து, காலநிலை மாற்றம் குறித்து 1969ஆம் ஆண்டிலேயே இந்திய அறிவியல் மாநாட்டில் பேசி இருக்கிறார். உலகம் அதிகமாக வெப்பமாவதால் கடல் மட்டம் உயரும் என்பதையும் 1989ஆம் ஆண்டு டோக்கியோ மாநாட்டில் எச்சரிக்கை விடுத்தார்.

### கலைஞர் மறைவின்போது - உருக்கமான இரங்கற்குறிப்பு பதிவு செய்தவர்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது அளப்பரிய அன்பு கொண்டவரான திரு. எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள், தலைவர் கலைஞர் மறைவின்போது மிக உருக்கமான இரங்கற்குறிப்பையும் பதிவு செய்திருந்தார். தன்னுடைய பெயரிலான எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிலம் தந்து உதவியதையும், ஜே.ஆர்.டி. டாடா பெயரிலான சுற்றுச்சூழல் தொழில்நுட்ப மையத்தை இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணன் அவர்களுடன் இணைந்து முத்தமிழறிஞர் கலைஞர் திறந்து வைத்ததையும் நன்றிப் பெருக்குடன் பதிவு செய்துள்ளார்.

> **“தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் வேளாண் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு, வேளாண் ஆராய்ச்சி மையங்கள் அதிகளவில் உருவாக்கப்பட்டு, உணவு உற்பத்தியில் புரட்சியும், அதனை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதற்கான செயல்முறைத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது. இன்றளவிலும் இந்தியாவின் வெற்றிகரமான மாடலாக இருப்பது முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்து மாடல்தான். இந்தப் பங்களிப்பில் அறிவியலாளர் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் ஆலோசனைகளும் இணைந்திருக்கின்றன.”**

### ‘விஞ்ஞானிகளின் விஞ்ஞானி’ என முத்தமிழறிஞர் கலைஞரைப் பாராட்டியவர்!

தமிழ்நாட்டிற்கான உயிரி தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கியவரும் முத்தமிழறிஞர் கலைஞர்தான் என்பதைக் குறிப்பிட்டுள்ள எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், கலைஞரின் ஆட்சி எப்போதும் உழவர்கள் நலன் நாடும் ஆட்சியாகவே இருந்தது என்பதையும், விஞ்ஞானிகளின் விஞ்ஞானியாக முத்தமிழறிஞர் கலைஞர் திகழ்ந்தார் என்றும் பாராட்டியுள்ளார்.

2021இல் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் நடந்த பன்னாட்டுக் கருத்தரங்கைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பு எனக்கு அமைந்தபோது, அவருடைய பணிகளைப் பாராட்டிப் பேசினேன். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு இன்றைய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும், இந்த அரசை வழி நடத்தும் பொறுப்பை ஏற்றுள்ள முதலமைச்சராகிய என்னையும் அவர் பாராட்டி, வளர்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்கினார்.

‘பசுமைப் புரட்சியின் தந்தை’ எனப் போற்றப்படும் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் 28.9.2023 அன்று மறைவெய்தியபோது அவரது உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தியதுடன், அரசின் சார்பில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானியான டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், இந்திய அளவில் முத்திரை பதித்து, உலகளவில் புகழ் பெற்றவர். பத்மவிபூஷன், ரமோன் மகசசே உள்ளிட்ட உயரிய விருதுகளைப் பெற்றுள்ள அவரது நினைவைப் போற்றுகிற வண்ணம் தமிழ்நாடு அரசின் சார்பில் அறிவிப்பை வெளியிடுகிறேன்.

### எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரில் கல்லூரி - ஆராய்ச்சி நிலையம் - விருது!

தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இனி, ‘டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்’ என்று அழைக்கப்படும்.

அதேபோல், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளம் வேளாண் அறிவியலில் பயிர்ப்பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெற்று முன்னிலை பெறும் மாணவருக்கு டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

கர்நாடகாவிடமிருந்து காவிரி நீரைப் பெற்றுத் தராத ஒன்றிய அரசைக் கண்டித்து

# டெல்டா மாவட்ட விவசாயிகள் கடையடைப்பு - பேரணி!

## பல ஆயிரம் பேர் பங்கேற்பு!

*தஞ்சை, அக்.12-*

காவிரியில் தண்ணீர் திறந்து விட மறுக்கும் கர்நாடகா, நடவடிக்கை எடுக்க மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுகளைக் கண்டித்து டெல்டா மாவட்டங்களில் நேற்று கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது.

தஞ்சையில் எல்.ஐ.சி. அலுவலகத்தை முற்றுகையிட்டு காவிரி படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் சண்முகம் தலைமையில் பழைய பேருந்து நிலையம் அருகில் இருந்து புறப்பட்ட பிரமாண்ட பேரணி, ஆற்றுப்பாலம் வழியாகச் சென்று காந்திஜி சாலையில் உள்ள எல்.ஐ.சி. அலுவலகத்தை சென்றடைந்தது. அங்கு சாலை மறியல் போரட்டத்தில் ஈடுபட்ட ஏராளமானோர் தொடர் முழக்கங்களை எழுப்பினர்.

இப்போராட்டத்தில் தி.மு.க., காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, திராவிடர் கழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் கலந்துகொண்டனர்.

இப்பிரச்சினையில் தீர்வு இல்லை என்றால் அடுத்தக்கட்டமாக மாநில அளவில் போராட்டம் நடத்தப்படும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேபோல் திருச்சி பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தி.மு.க. உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று ஒன்றிய மற்றும் கர்நாடக அரசுகளைக் கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

நாகை மாவட்டத்தில் 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடைகளை அடைத்து வர்த்தகர்கள் முழு கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாகை, நாகூர், வேளாங்கண்ணி, வேதாரண்யம், கீழ்வேளூர், கீழையூர், திருமருகல், திட்டச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் அனைத்து கடைகளும் அங்கு அடைக்கப்பட்டுள்ளதால், அப்பகுதி முழுவதும் வெறிச்சோடி காணப்பட்டது.

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் தலைமை தபால் அலுவலகம் முன்பு நகர மன்றத் தலைவர் புகழேந்தி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. கூட்டணி கட்சியினர் மற்றும் விவசாயிகள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

வேளாங்கண்ணி தபால் நிலையம் முன்பு கீழையூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் தாமஸ் ஆல்வா எடிசன் தலைமையிலும், வேளாங்கண்ணி பேரூர் தி.மு.க. செயலாளர் மரிய சார்லஸ் முன்னிலையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கடலூர் மாவட்டம் காட்டு மன்னார்கோயில் தாலுகாவில் கர்நாடக அரசைக் கண்டித்தும், காவிரியில் தண்ணீர் திறந்து விட வலியுறுத்தியும் போராட்டம் நடைபெற்றது.

விவசாயிகளுக்கு ஆதரவாக சுமார் 2 ஆயிரத்து 500 கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. காட்டு மன்னார்கோயில் தி.மு.க. மேற்கு ஒன்றியச் செயலாளர் முத்துசாமி தலைமையில் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் மற்றும் விவசாய சங்கத்தினர் பேரணியாகச் சென்று காட்டுமன்னார் கோயில் தபால் நிலையம் முன்பு முழக்கங்களை எழுப்பினர்.

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரியில் காவிரியில் உரிய தண்ணீரை திறந்து விட மறுக்கும் கர்நாடக அரசைக் கண்டித்தும், தண்ணீர் திறந்து விட ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கொரடாச்சேரி வெட்டாற்று பாலத்தில் இருந்து தபால் நிலையம் வரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பேரணியாகச் சென்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

இதனிடையே நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் காவிரி விவகாரத்தில் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவே டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 12-10-2023

# பழனிசாமியின் காவிரி துரோகங்கள் 1

'காவிரிப் பிரச்சினைக்காக துணிச்சலாகச் செயல்பட்டது அ.தி.மு.க. அந்தத் துணிச்சல் உங்களுக்கு எங்கே போனது?' என்று கேட்கிறார் பழனிசாமி. நாடாளுமன்றத்தையே 22 நாட்கள் நடுங்க வைத்ததாம் அ.தி.மு.க. புதிய புளுகு மூட்டையை அவிழ்த்திருக்கிறார் பழனிசாமி!

**நாடாளுமன்றத்தை இவர்கள் காவிரிப் பிரச்சினைக்காக முடக்கவில்லை. நாடாளுமன்றத்தை முடக்கியது பா.ஜ.க.வுக்கு எதிரான எதிர்க் கட்சிகள்தான். 2018 ஆம் ஆண்டு ரஃபேல் ஊழல் அம்பலம் ஆனது. அதற்கு பதில் சொல்ல பிரதமரை வலியுறுத்தினார்கள் எதிர்க்கட்சிகள். அவர் பதில் சொல்லவில்லை. ஆந்திராவைச் சேர்ந்த எம்.பி.களும் பா.ஜ.க. அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அப்போது பா.ஜ.க.வின் தொங்கு சதையாக இருந்த அ.தி.மு.க.வை அந்தக் கட்சி பயன்படுத்தியது.**

**'காவிரிப் பிரச்சினையைச் சொல்லி திசை திருப்புங்கள்' என்று சொன்னார்கள். எனவே அ.தி.மு.க.வும் அதைப் பேசியதே தவிர, இவர்களால் நாடாளுமன்றம் முடக்கப்படவில்லை.**

'காவிரி ஆணையத்தை அமைக்காவிட்டால் பா.ஜ.க.வுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் வாக்களிப்போம் என்று அ.தி.மு.க. சொல்ல வேண்டும்' என்று சொன்னதற்காக கே.சி.பழனிசாமியை நீக்கியவர்தான் எடப்பாடி பழனிசாமி. இந்த துரோக வரலாறு அவருடையது.

காவிரியில் இருந்த உரிமையை ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் அடகு வைத்த அரசுதான் பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு. இன்றைக்கு ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைக்கக் கூடாது என்று பழனிசாமி சொல்கிறார். ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைக்கும் நிலையை உருவாக்கியதே பழனிசாமிதான்.

**2021 ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில்தான் காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு முழுநேரத் தலைவர் நியமிக்கப்பட்டார். 2018ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளாக முழுநேரத் தலைவர் நியமிக்கவே இல்லை. நியமிக்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு அடம்பிடித்தது. அதனைத் தட்டிக் கேட்காமல் பழனிசாமியின் அரசு தலையாட்டிக் கொண்டுதான் இருந்தது.**

"காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க மாட்டோம்" என்று உச்சநீதிமன்றத்தில் சொன்ன அரசுதான் பா.ஜ.க. அரசு. உச்சநீதிமன்றம் அதில் உறுதியாக இருந்ததால் அதை வேறு வழியில்லாமல் ஏற்றுக் கொண்டார்கள். அப்படி ஏற்றுக் கொண்டாலும் அதனை தனித்த அதிகாரம் பொருந்திய அமைப்பாக உருவாக்கி விடாமல் தட்டிக் கழித்து வந்தார்கள். ஒன்றிய அரசின் ஜல்சக்தித் துறையின் கிளை அமைப்பாக மாற்றினார்கள். அத்தகைய காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு ஒரு நிரந்தர, முழுநேரத் தலைவரைக் கூட நியமிக்காமல் மூன்றாண்டு காலமாக காலம் கடத்தி வந்தது பா.ஜ.க. அரசு. தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்து, முதன் முதலாக டெல்லி சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பிரதரிடம் 25 கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கொடுத்தார்.

ஒன்றிய நீர்வளத்துறை ஆணையரையே, காவிரி மேலாண்மை ஆணையத் தலைவராக கூடுதல் பொறுப்பு கொடுத்திருந்ததை மாற்றி, காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு நிரந்தர, முழுநேர, முழுமையான தலைவரை நியமிக்க பிரதமரை வலியுறுத்தினார் முதலமைச்சர். இதைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ஆம் தேதியன்று சவுமித்ரா குமார் ஹல்தார் இதன் முழுநேரத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

"தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களும் காவிரி மேலாண்மை வாரியத்தில் பங்கேற்கும் தங்களது பிரதிநிதிகளின் பெயரை நாளை மாலைக்குள் மத்திய அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும். மத்திய அரசு நான்கு நாட்களுக்குள் (4.10.2016) காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும்" என்று உச்சநீதிமன்றம் உத்தரவு போட்டது. இதனை உச்சநீதிமன்றத்தில் ஏற்றுக் கொண்டு போன ஒன்றிய அரசின் வழக்கறிஞர், ஒரு வார காலத்தில் தலைகீழாக ஒரு மனுவைத் தாக்கல் செய்தார்.

"காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது உள்ளிட்ட நடுவர் மன்றத்தின் உத்தரவுக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் வேண்டும். மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் தகராறு சட்டத்தில் இதற்கான பல்வேறு விதிகள் இருக்கிறது. எனவே இதுகுறித்து உத்தரவிட உச்சநீதிமன்றத்துக்கே அதிகாரம் இல்லை. எனவே உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை திரும்பப் பெற வேண்டும்" என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டது. "ஒரு வாரத்துக்கு முன் ஏற்றுக் கொண்டு, இன்று மாற்றி ஏன் மனு போடுகிறீர்கள்?" என்று நீதிபதிகள் கேட்டார்கள். 'தவறாக ஒப்புதல் தெரிவித்து விட்டதாக' பா.ஜ.க. அரசின் வழக்கறிஞர் சொன்னார்.

'இந்த விவகாரத்தில் நீங்கள் தலையிட வேண்டாம், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்று, ஒன்றிய அரசின் வழக்கறிஞர் உச்சநீதிமன்றத்தில் 18.10.2016 அன்றும் சொன்னார். நான்கு மாநில அரசுகளும் பா.ஜ.க. அரசின் நிலைப்பாட்டை கடுமையாக எதிர்த்தார்கள். மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க உச்சநீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு என்று 9.11.2016 அன்று உச்சநீதிமன்றம் மகத்தான தீர்ப்பை அளித்தது. இதைத் தொடர்ந்து காவிரிப் பிரச்சினையை 2017 ஆம் ஆண்டு ஜூலை 11 முதல் செப்டம்பர் 20 வரையில் மொத்தம் 27 நாட்கள் விசாரணை நடத்தியது உச்சநீதிமன்றம்.

இதனிடையே ஜெயலலிதா மரணம் அடைந்து பழனிசாமி முதலமைச்சர் ஆக்கப்பட்டு விட்டார். (2017 பிப்ரவரி 14) ஓராண்டு கழித்து 2018 பிப்ரவரி 16 தான் உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியானது. அப்போது தமிழகத்தின் தரப்பு வாதங்களை முறையாக, சரியாக வைக்க பழனிசாமியின் அரசாங்கம் தவறி விட்டது.

- தொடரும்

## பண்டிகையை முன்னிட்டு விரைவு பேருந்து முன்பதிவு தொடக்கம்!

*சென்னை, அக்.12-*

*போக்குவரத்துக் கழக அதிகாரிகள் கூறியதாவது:- நடப்பாண்டு தீபாவளி பண்டிகை நவ.12ம் தேதி (ஞாயிறு) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, தமிழகம் முழுவதும் அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. இந்நிலையில், அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளுக்கான முன்பதிவு தொடங்கியுள்ளது.*

*விரைவு பேருந்துகளை 30 நாட்களுக்கு முன்பாக முன்பதிவு செய்ய முடியும்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.10.2023) முகாம் அலுவலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### எதிர்க்கட்சித் தலைவர் சொல்வது உண்மையல்ல; முக்கொம்பு சம்பவத்தில்

# குற்றம் இழைத்த காவலர்கள் மீது கடும் நடவடிக்கை - சிறையில் அடைப்பு!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!

**சென்னை, அக். 12-**

**திருச்சி மாவட்டம், முக்கொம்பு சுற்றுலாத் தலத்தில் பெண் ஒருவரிடம் அத்துமீறி நடந்து கொண்ட காவலர்கள் மீது மேற்கொள்ளப் பட்ட, நடவடிக்கை தொடர்பான கவன ஈர்ப்புக்கு பதிலளித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், குற்றம் இழைத்த காவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 04.10.2023 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில், திருச்சி மாவட்டம், ஜீயபுரம் காவல் நிலைய சரகம், முக்கொம்பு சுற்றுலாத் தலத்திற்கு ஜீயபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சசிகுமார், நவல்பட்டு காவல் நிலைய காவலர் பிரசாத், திருவெறும்பூர் பகுதி நெடுஞ்சாலை ரோந்து பணியில் பணிபுரிந்து வரும் சங்கர் ராஜபாண்டியன் ஆகியோர் அனுமதியோ, விடுப்போ பெறாமலும், உயரதிகாரிகளுக்கு எவ்வித தகவலும் தெரிவிக்காமலும், ஜீயபுரம் போக்குவரத்து காவல் நிலையத்தில் பணிபுரிந்து, பல நாட்களாகப் பணிக்கு வராமல் இருந்த காவலர் சித்தார்த்தன் என்பவருடன் இணைந்து சென்று, சுற்றுலாத் தலத்திற்கு வருகை தந்திருந்த இளைஞர் மற்றும் 17 வயது பெண்ணை மிரட்டி, அந்த இளைஞரைத் தாக்கி விரட்டி அனுப்பிவிட்டு, உடனிருந்த பெண்ணை அந்தக் காவலர்கள் தாங்கள் வந்திருந்த தனியார் காரில் ஏற்றி, அவரிடம் தவறான முறையில் நடந்திருக்கிறார்கள். பின்னர், அந்தப் பெண் சத்தம் போட்டதால், அவரைக் காரிலிருந்து இறக்கி விட்டிருக்கிறார்கள்.

**புகாரைப் பெற்று காவல்துறை நேரில் சென்று விசாரணை!**

இதனையடுத்து அந்தப் பெண் மற்றும் அவருடன் வந்த இளைஞர் இருவரும் முக்கொம்பு புறக்காவல் நிலையத்திற்குச் சென்று புகார் அளித்ததின் பேரில், அங்கு பணியிலிருந்த காவல்துறையினர் உடனடியாக அவ்விடத்திற்குச் சென்று, அந்தக் காவலர்களை விசாரித்த போது, அவர்கள் முறையாக பதிலளிக்கவில்லை.

**புகாரின் பேரில் மூன்று காவலர்கள் பணிஇடை நீக்கம்!**

இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, காவல் நிலையத்தில் புகார் தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொன்னார். அது உண்மையல்ல. அந்தக் காவல் நிலையத்தில் புகார் அளித்தவுடன், அந்தக் காவல் நிலைய உதவி ஆய்வாளர், உடனடியாக எஸ்.பி. அவர்களைத் தொடர்பு கொண்டு, அவருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

(மேசையைத் தட்டும் ஒலி)

உடனடியாக மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அளவில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்ட உதவி ஆய்வாளர் மற்றும் மூன்று காவலர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். மேலும் அந்தப் பெண் அளித்த புகாரின் பேரில் ஜீயபுரம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, உதவி ஆய்வாளர் மற்றும் மூன்று காவலர்கள் அன்றே கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், குற்றம் இழைத்த காவலர்கள் மீது கடுமையான தண்டனை வழங்கக் கூடிய பிரிவுகளின் கீழ், துறை ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் இதில் விசாரணை முடிக்கப்பட்டு, இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும்.

**பாலியல் வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை!**

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில், குறிப்பாக பாலியல் வன்முறையில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும், அவர்கள் மீது பாரபட்சமின்றி, இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

### 100 நாள் வேலைத்திட்ட பயனாளிகளுக்கு

# தொய்வின்றி ஊதியம் வழங்கப்படுகிறது!

## அமைச்சர் இ.பெரியசாமி பேட்டி!

*திண்டுக்கல், அக்.12-*

*100 நாள் வேலை திட்டத் தொழிலாளர்களுக்கு உடனுக்குடன் சம்பளம் வழங்கப்படுகிறது என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி கூறினார்.*

*தமிழக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி நேற்று திண்டுக்கல்லில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-*

*100 நாள் வேலைத் திட்டத்தில் 8 வாரமாக சம்பளம் வழங்கவில்லை என்று தவறான தகவல் பரவுகிறது. இந்த திட்டத்தில் மொத்தம் ரூ.2 ஆயிரத்து 100 கோடி விடுவிக்க வேண்டியது இருந்தது. அதில் கடந்த வாரம் ரூ.1,800 கோடி விடு விக்கப்பட்டது. அதையடுத்து தொழிலாளர்களின் வங்கி கணக்கில் சம்பளம் செலுத்தப்பட்டது. மீதமுள்ள தொகை ரூ.300 கோடி வந்ததும், உடனே சம்பளம் வழங்கப்படும்.*

*கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு ஆண்டில் கூட 27 ஆயிரம் கோடி மணி நேரம் வேலை வழங்கவில்லை. ஆனால் தமிழக முதல்வர் தலைமையில் தமிழக அரசு கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை 27 ஆயிரம் கோடி மணி நேர வேலை வழங்கி இருக்கிறது. இது*



*ஏழை, எளிய மக்களுக்கான திட்டம். இந்தியாவில், தமிழகத்தில் தான் 200 சதவீதம் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் ஒரு ஊராட்சி தலைவர் 8 வாரமாக சம்பளம் வழங்கவில்லை என்று கூறுகிறார். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 3 மாதங்கள் வரை சம்பளம் வழங்கவில்லை. ஆனால் கழக ஆட்சியில் சம்பளம் முழுமையாக உடனுக்குடன் வழங்கப்படுகிறது.*

**கிராமங்களில் வசதிகள்**

*அதேபோல் தமிழகத்தில் அடுத்த வாரம் / குடிநீர் திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. கிராமங்களில் ஏற்கனவே 1,496 மேல்நிலை குடிநீர் தொட்டிகள் கட்டுவதற்கு ரூ. 209 கோடியும், புதிதாக 2 ஆயிரத்து 500 மேல்நிலை குடிநீர் தொட்டிகள் கட்டுவதற்கு ரூ.700 கோடியும் என மொத்தம் ரூ.909 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. கூட்டுக் குடிநீர் திட்டத்தில் 3 ஆயிரத்து 500 குடிநீர் தொட்டிகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

*2024ம் ஆண்டுக்குள் 8000 கோடி தொட்டிகள் கட்டப்படும். அனைத்து கிராமங்களிலும் மேல்நிலை குடிநீர் தொட்டி இருக்கிறது என்ற நிலை உருவாக்கப்படும். அதற்கேற்ப குடிநீர் ஆதாரங்களைப் பெருக்கி மக்களுக்கு குடிநீர் வழங்கப்படும். மேலும் கிராமங்களில் 4000 கோடி செலவில் 9 ஆயிரம் கிலோமீட்டர் சாலை அமைக்கப்படுகிறது.*

*மேலும் நபார்டு திட்டத்தில் ரூ.300 கோடியில் பாலங்கள் கட்டப்படுகிறது. இதுதவிர கிராமங்களில் மேலும் ரூ.1,000 கோடியில் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அனைத்து ஊராட்சிகளிலும் மின்விளக்குகள், சாலை, குடிநீர் வசதி செய்து தரப்படும். ஊரக வளர்ச்சித்துறை உள்பட அனைத்துத் துறைகளிலும் கழக அரசு தமிழக முதல்வர் தலைமையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.*

**தமிழகத்தின் உரிமை**

*விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது கழக ஆட்சியில்தான். தற்போதும் கழக ஆட்சிக்கு வந்ததும் ஒரே ஆண்டில் 1 லட்சத்து 50 ஆயிரம் மின்இணைப்பு வழங்கப்பட்டது. வறட்சி, வெள்ளத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டால் உடனே உதவுவது கழக அரசுதான். விவசாயிகள் நலனில் முதல்அமைச்சர் அவர்கள் அதிக அக்கறை செலுத்தி வருகிறார். எந்த சூழ்நிலையிலும் தமிழகத்தின் உரிமையை விட்டுக்கொடுக்க மாட்டார். காவிரி நீரைப் பெற்று தருவார்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*




தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தொழில்துறை சார்பில் சென்னை லீலா பேலஸில் நேற்று முன்தினம் (10.10.2023) நடைபெற்ற தொழில் நிறுவனங்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் (Industry Engagement Meet) தொழில் நிறுவனங்கள், விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் விளையாட்டு அமைப்புகள், பொது மக்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு நிதியுதவி வழங்கும் பொருட்டு HDFC வங்கியுடன் இணைந்து புதிதாக உருவாக்கப்பட்டுள்ள QR code ஐ இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர். உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா முன்னிலையில் அறிமுகப்படுத்தினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.10.2023) சென்னையில், வயது மூப்பின் காரணமாக உயிரிழந்த சன் செய்தித் தொலைக்காட்சியின் முதன்மை ஆசிரியரும், ஊடகவியலாளருமான மு. குணசேகரனின் தந்தை முனியா அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி.வீரமணி, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன், மாநில திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத்தலைவர் நே. சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

### நாளை - சென்னையில் நடைபெறுகிறது! கழக முன்னாள் துணைப் பொதுச் செயலாளர்

# ‘வாலிபப் பெரியார்’ ஏ.வி.பி.ஆசைத்தம்பி நூற்றாண்டு விழா!

## திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

### பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமை! பி.கே.சேகர்பாபு வரவேற்புரை! தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை!

சென்னை, அக். 12-

**“வாலிபப் பெரியார்” என கழகத்தவரால் அன்போடு அழைக்கப்பெற்றவரும், கழக முன்னாள் துணைப் பொதுச் செயலாளரும், கழகம் வளர்த்த மூத்த முன்னோடியுமான ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழா, சென்னையில் நாளைய தினம் நடைபெறுகிறது.**

**கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றுகிறார்.**

இந்நிகழ்வு பற்றிய விபரம் வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழக மூத்த முன்னோடிகளில் ஒருவர், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், இயக்கத்தின் சிங்கம், கழகத்தின் கருவூலம், தந்தை பெரியாரின் மாணவர், தன்மானப் பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புத்தம்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற தோழர், கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில், சட்டப் பேரவை உறுப்பினராகவும்; பின்னர் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு கழகக் கொள்கையினை பாராளுமன்றத்தில் ஓங்கி ஒலித்தவர், பெரியார் அவர்களுடைய



உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதிபலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலே வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட “வாலிபப் பெரியார்” என்று கழக நிர்வாகிகள், தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர், ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள்!

நெருக்கடி நிலை காலக்கட்டத்தில் ‘மிசா கைதியாக’ ஓராண்டு சென்னை மத்திய சிறையில் இருந்த பெரும் தியாக வரலாற்றுக்கும் உரியவர், ஆசைத்தம்பி அவர்கள்.

அப்பெருமகனாரின் நூற்றாண்டு விழா, தி.மு.க. தலைமைக் கழகம் சார்பில், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.வின் நிகழ்ச்சி ஏற்பாட்டில், நாளைய தினம் (13.10.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 5.30 மணியளவில், சென்னை - பாரிமுனை இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெறுகிறது.

இம்மகத்தான நிகழ்வுக்கு எழிலான ஏற்பாடுகளைச் செய்துள்ள, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, விழாவில் வரவேற்புரையாற்றுகிறார்.

கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., விழாவிற்கு முன்னிலை வகிக்கிறார்.

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள், விழாவிற்குத் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்வில் - கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, ‘வாலிபப் பெரியார்’ ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றுகிறார்.

துறைமுகம் மேற்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் - ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் புதல்வர் சௌந்திரபாண்டியன் உள்ளிட்ட குடும்பத்தினரும், கழக முன்னோடிகளும், நிர்வாகிகளும், தோழர்களும் கலந்துகொள்கிறார்கள்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. - இந்நிகழ்வுக்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

### பொருள்கள் பெற அனைத்து குடும்ப அட்டைதாரர்களும்

# நியாய விலைக் கடைகளில் இனி கைவிரல் ரேகை பதியத் தேவையில்லை!

## அமைச்சர் அர.சக்கரபாணி அறிவிப்பு!

சென்னை, அக்.12-

பொருள்கள்அ பெற அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களும் நியாயவிலைக் கடைகளுக்குச் சென்று கைவிரல் ரேகை பதியத் தேவையில்லை என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஒன்றிய அரசு வழங்கும் அரிசியைப் பெறும் குடும்ப அட்டைதாரர்களின் விவரங்களைப் புதுப்பிக்க ekyc (இணைய வழியில் உங்கள் நுகர்வோரை அறிந்து கொள்ளுங்கள்) என்ற முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி குடும்ப அட்டையிலுள்ள அனைத்து உறுப்பினர்



களும் பொது விநியோகத் திட்ட அங்காடிகளிலுள்ள கருவி மூலம் கைரேகைப் பதிவு அல்லது கருவிழி வழிப் பதிவு வழியாகத் தங்கள் விவரங்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

இது நடைமுறைப்படுத்தப்பட்டு 45% குடும்ப அட்டைதாரர்களின் விவரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. குடும்ப உறுப்பினர்களுக்கு ஏதும் இடையூறின்றி இப்பணியினைச் செய்திட அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஓய்வாக இருக்கும் போதோ அல்லது பொருள்கள் வாங்க கடைக்கு வரும்போதோ கைவிரல் ரேகைப் பதிவு மூலம் புதுப்பிக்கக் கூறப்பட்டிருந்தது. சில இடங்களில் அனைத்து உறுப்பினர்களும் வந்தால்தான் பொருள்கள் பெற முடியும் என்று தவறுதலாகக் கூறப்பட்டதாகக் கேள்விப்பட்டவுடனே அவ்வாறு செய்யக் கூடாது என கடுமையாக எச்சரிக்கப்பட்டது. குடும்ப அட்டைதாரர்கள் அவரவர்கள் வசதிக்கேற்ப விவரங்களைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

அவ்வாறு இயலவில்லையெனில், இதற்கென தனி முகாம்கள் நடத்தவும், தேவைப்படின் வீட்டிற்கே சென்று புதுப்பித்திடவும் நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக பொதுமக்கள் யாரும் அச்சப்படத் தேவையில்லை எனவும் குடும்ப அட்டைகள் இதனால் இரத்து செய்யப்படமாட்டாது எனவும் குடும்ப அட்டைதாரர்கள் வழக்கம்போல் கடைக்கு வந்து தங்களது பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் நேற்று (10.10.2023) சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில் தெரிவித்தார்.

### இந்துக்கள் வழிபடும் கோயில்களை எல்லாம் மேம்படுத்தித் தருகிறோம்! ஆனாலும்

# நாங்கள் ஒருபோதும் சனாதனத்தை ஏற்பவர்கள் அல்ல!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு விளக்கம்!

**சென்னை, அக்.12–**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் முதல் துணை மதிப்பீடுகள் மீதான விவாதத்தில் பா.ஜ.க. உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் பேசுகையில் குறுக்கிட்டு விளக்கமளித்த, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ‘‘நாங்கள் இந்துக்கள் வழிபடும் கோயில்களை எல்லாம் மேம்படுத்தித் தருகிறோம். ஆனாலும், நாங்கள் ஒரு போதும் சனாதனத்தை ஏற்பவர்கள் அல்ல!’’ என்று தெளிவுறக் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், இதுகு



றித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**திருமதி வானதி சீனிவாசன்:** கோவை தெற்குத் தொகுதியிலே காந்திபுரம் மேம்பாலம் பகுதியிலே இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான கண்ணனூர் மாரியம்மன் கோயிலை மேம்பாலத்திற்காக அந்த மக்கள் விட்டுக்கொடுத்தார்கள், இடித்தார்கள். இதுவரைக்கும் அந்தக் கோயில் அங்கு கட்டப்படவில்லை. இதுதொடர்பாக நான், அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தகவல் கொடுத்திருக்கிறேன்.

60 ஆண்டு காலம் பூர்த்தி செய்து, நல்ல நிறைவாக ஒரு திருமணத்தை திருக்கடையூரில் அமைச்சர் அவர்கள் நடத்தினார்கள். கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அந்த சனாதன தர்மத்தின்படி 100வது ஆண்டும் அவர் அதேமாதிரி கோயிலில் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென பிரார்த்தனை செய்து, எங்கள் தொகுதி கோயிலை உடனடியாக அவர் அங்கு அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** ஒரு மனிதனுக்கு சஷ்டியப்த பூர்த்தி பூஜை என்பது அறுபது ஆண்டுகள் நிறைந்து, மத நம்பிக்கை இருப்பவர்கள், தெய்வ நம்பிக்கை இருப்பவர்கள் வழிபடுவது அவர்கள் தனிப்பட்ட உரிமை. அதற்காக நீங்கள் சொல்கின்ற சனாதனத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்பது அல்ல.

நாங்கள் இந்துக்களை ஏற்றுக்கொள்கிறோம். இந்துக் கடவுள்களை ஏற்றுக்கொள்கிறோம். இந்துக்கள் வழிபடுகின்ற ஆலயங்களை மேம்படுத்தித் தருகின்றோம். ஆகவே, நாங்கள் சஷ்டியப்த பூர்த்தி பூஜை செய்ததாலும், நீங்கள், பெண் கல்வி உரிமையை எதிர்ப்பதை நாங்கள் எந்நாளும் எதிர்ப்போம். நீங்கள் ஏற்றுக்கொள்கின்ற உடன்கட்டை ஏறுதலை எந்நாளும் எதிர்ப்போம். நீங்கள் ஏற்றுக்கொள்கின்ற குலக் கல்வியை எந்நாளும் எதிர்ப்போம்.

ஆனால், இந்துக்களை நாங்கள் முழுவதுமாக ஏற்றுக்கொள்வோம் என்று இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோவை - காந்திபுரம் மேம்பாலம் பகுதியிலே எடுக்கப்பட்ட திருக்கோயில் என்பது நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பகுதியிலே அமைந்திருந்தது. உங்களுடைய கோரிக்கை பரிசீலனையில் உள்ளது. தகுந்த இடம் கிடைத்தவுடன், அந்தத் திருக்கோயிலை மீண்டும் கட்டித் தருவதற்குண்டான நடவடிக்கையை நிச்சயம் இந்து சமய அறநிலையத் துறை எடுக்கும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

கலைஞர் 100 1924 - 2023

**கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (Mech) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது.**

இ.பொ.து.ந.க.எண்.எம்1 / 2167 / N / 2023

வடக்கு வட்டார பயன்பாட்டிற்கென (மண்டலம் 1 முதல் 5 வரை) 50 எண்ணிக்கையில் டிராக்டர்களில் பொருத்தப்பட்ட நீரிரைக்கும் பம்புகள் **(4"X4" Size)** அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் 375 மணி நேரத்திற்கு (ஒவ்வொரு பம்பிற்கும்) வாடகை முறையில் பணியமர்த்தும் பணி.

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம், **18.10.2023** பிற்பகல் **3.00,** மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் **19.10.2023** பிற்பகல் **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு : **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5534 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்)**


### ‘வணிக வரித்துறை சமாதானத் திட்டம்’ -1 லட்சம் ஏழை வணிகர்களின் நிலுவைத் தொகை முழுவதும் தள்ளுபடி!

# வரி நிலுவைக்காக பிணைக்கப்பட்ட - 1002 சொத்துகள் திரும்ப ஒப்படைப்பு!

## தலைமைச் செயலகத்தில் - வணிக வரித்துறை அமைச்சர் பி.மூர்த்தி பேட்டி!

*சென்னை, அக்.12 -*

வணிகவரித்துறை சமாதானத் திட்டம் குறித்து, நேற்று தலைமைச் செயலகத்தில் பேட்டியளித்த வணிகவரித்துறை மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஏறக்குறைய ஒரு இலட்சம் எளிய வணிகர்களுக்கு நிலுவைத் தொகை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படுவதுடன், வரி நிலுவைக்காக பிணைக்கப்பட்டுள்ள 1,002 சொத்துக்கள் வணிகர்களுக்கு உடனடியாக திரும்ப ஒப்படைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

பேட்டியின் போது, அமைச்சர் பி.மூர்த்தி குறிப்பிட்டதாவது:-

தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரிச் சட்டமானது 2006-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதனுடன் 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரிச்) சட்டம் உள்ளிட்ட மேலும் பத்து சட்டங்கள் நடைமுறையில் இருந்து வந்தன. சமாதானத் திட்டம் என்பது முத்தமிழறிஞர்



தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனையில் உதித்த சீரிய திட்டமாகும். சமாதானத் திட்டம் முதன் முதலாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் 1999-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு பின்னர் 2002, 2006, 2008, 2010 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளில் சமாதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, அதன் மூலம் வணிகர்களின் நீண்ட கால வரி நிலுவைகள் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளன.

தற்போது மாநிலம் முழுமைக்கும் 31.08.2022 அன்றைய தேதியில் பல்வேறு முந்தைய சட்டங்களின் கீழ் 2,11,607 இனங்களில் ஏறக்குறைய ரூபாய் 25,000 கோடி வரி நிலுவையாக உள்ளது. வணிகர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள நமது அரசினை பிற மாநிலங்கள் வியக்கும் வகையில் வழிநடத்திக் கொண்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுவரை இல்லாத அளவிற்கு பல புதிய சலுகைகளோடு பழைய நிலுவைத் தொகைகளை வசூலிப்பதற்காக புதிய அணுகுமுறையிலான அறிவித்திருக்கிறார்கள்.

திட்டத்தினை சமாதான இந்தத் திட்டத்தின் கீழ் வரி நிலுவை வைத்திருக்கும் வணிகர்கள் ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்படுகி றார்கள். முதலாவதாக, ஒரு வரி விதிப்பு ஆண்டில் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு குறைவான வரி, வட்டி, அபராதத் தொகை செலுத்த வேண்டியவர்கள். இவர்கள் பெரும்பாலும் சிறு வணிகம் செய்யும் எளிய வணிகர்களாகவே இருப்பார்கள். இந்த வணிகர்கள் வரிவிதிப்பு ஆண்டில் ரூபாய் ஐம்பதாயிரம் அல்லது அதற்கு குறைவாக வரி, அபராதம் மற்றும் நிலுவைத் தொகை உள்ள எளிய வணிகர்கள் அனைவருக்கும் வரி, அபராதம் மற்றும் வட்டி முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும் என்பதும், ஒவ்வொரு வரிவிதிப்பு ஆண்டிற்கும் இந்த தள்ளுபடி வழங்கப்படும் என்பதும், திரண்ட வட்டித் தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படுவதும் இந்த சமாதான திட்டத்தின் கீழ் முதன்முறையாக வழங்கப்படும் சிறப்பு சலுகைகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் காரணமாக ஏறக்குறைய ஒரு இலட்சம் எளிய வணிகர்களுக்கு நிலுவைத் தொகை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படுவதுடன், வரி நிலுவைக்காக பிணைக்கப்பட்டுள்ள 1,002 சொத்துக்கள் வணிகர்களுக்கு உடனடியாக திரும்ப ஒப்படைக்கப்படும். 47,000 வணிகர்கள் சிறப்பு சலுகைகள் பெற்று வரி நிலுவைச் சுமையில் இருந்து வெளிவர இருக்கிறார்கள். இத்திட்டம் எதிர்வரும் 16.10.2023 முதல் நடைமுறைக்கு வரும். நான்கு மாத காலம் அதாவது 2024ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் தேதி வரை நடைமுறையில் இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி குறிப்பிட்டார்.



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள காய்கறி சந்தை, காயல்பட்டினம் நகராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, உடன்குடி பேரூராட்சியில் காய்கறி சந்தை, ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சியில் தினசரி காய்கறி சந்தை, சாத்தான்குளம் பேரூராட்சியில் தினசரி காய்கறி சந்தை உள்ளிட்ட முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, புதிதாக கட்டப்பட இருக்கும் ஏரல் பேரூராட்சி புதிய அலுவலக கட்டிடம், சாத்தான்குளம் பேரூராட்சி பேருந்து நிலையம் மேம்பாடு மற்றும் ஆழ்வார்திருநகரி பேரூராட்சியில் அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டம் உள்ளிட்ட பணிகளுக்கு தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தனர். உடன் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், சிவராஜ், பிரம்மசக்தி, பை.மூ.ராமஜெயம், ரமேஷ், சுடலை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### சன் செய்தித் தொலைக்காட்சி முதன்மை ஆசிரியர் –

# ஊடகவியலாளர் மு.குணசேகரன் தந்தை மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 12–

சன் செய்தித் தொலைக்காட்சியின் முதன்மை ஆசிரியரும், ஊடகவியலாளருமான மு.குணசேகரன் அவர்களின் தந்தையார் மறைவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–


சன் செய்தித் தொலைக்காட்சி முதன்மை ஆசிரியரும், ஊடகவியலாளருமான மு.குணசேகரன் அவர்களின் தந்தையார் முனியா அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் மனம் வருந்தினேன்.

அவரது மறைவால் வாடும் குணசேகரன், அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



காவிரிப்படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் நாகை, மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை, அரியலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்பின் படி கர்நாடக அரசு தமிழகத்திற்கு உரிய அளவு தண்ணீரை திறந்து விட வலியுறுத்தியும், உச்சநீதிமன்ற அறிவுறுத்தலுக்கு பின் திறக்கப்படும் குறைந்த நீரைக்கூட தடுக்கும் கர்நாடக பா.ஜ.க. மற்றும் அமைப்புகளை கண்டித்தும், தமிழக விவசாயிகளைப் பற்றி கவலைப்படாத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், கடையடைப்பு போராட்டம் அறிவிக்கப்பட்டதையடுத்து நேற்று நாகை மாவட்டத்தில் கடையடைப்பு போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. நாகை கடைத் தெருவில் முழுமையாக கடைகள் அடைக்கப்பட்டிருந்தது.



காவிரிப்படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் மயிலாடுதுறை, நாகை தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை, அரியலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்பின் படி கர்நாடக அரசு தமிழகத்திற்கு உரிய அளவு தண்ணீரை திறந்து விட வலியுறுத்தியும், உச்சநீதிமன்ற அறிவுறுத்தலுக்கு பின் திறக்கப்படும் குறைந்த நீரைக்கூட தடுக்கும் கர்நாடக பா.ஜ.க. மற்றும் அமைப்புகளை கண்டித்தும், தமிழக விவசாயிகளைப் பற்றி கவலைப்படாத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், கடையடைப்புபோராட்டம் அறிவிக்கப்பட்டதையடுத்து நேற்று மயிலாடுதுறை மாவட்டத்தில் கடையடைப்பு போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. மயிலாடுதுறை கடைத் தெருவில் முழுமையாக கடைகள் அடைக்கப்பட்டிருந்தது.

### ஆயுள் தண்டனைக் கோப்புகளை விரைந்து பரிசீலித்து - நெடுநாள் சிறைவாசம் அனுபவித்து வரும்

# சிறைவாசிகளை முன் விடுதலை செய்ய - மனிதாபிமான அடிப்படையில் ஒப்புதல் வழங்கிடுவீர்!

## தமிழ்நாடு ஆளுநருக்கு - சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி கடிதம்!

சென்னை, அக்.12

**முன்விடுதலை தொடர்பான ஆயுள் தண்டனை சிறைவாசிகள் கோப்புகளை விரைந்து பரிசீலித்து அவர்களை முன்விடுதலை செய்ய ஒப்புதல் வழங்க வலியுறுத்தி ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுக்கு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கடிதம் எழுதியுள்ளார்.**



நேற்று முன்தினம் (10.10.2023) தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவை விவாதத்தின்போது, உறுப்பினர்கள் சிலர் இஸ்லாமிய சிறைவாசிகள் உள்ளிட்ட நெடுநாள் சிறைவாசத்தில் உள்ள சிறைவாசிகளை விடுதலை செய்வது குறித்து சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அவர்கள் அனைவரையும் விரைவில் விடுதலை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், உறுப்பினர்களின் கோரிக்கைகள் கவனத்துடன் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, ஆளுநரிடம் நிலுவையில் உள்ள முன்விடுதலை தொடர்பான ஆயுள் தண்டனை சிறைவாசி களின் கோப்புகளை விரைவாகப் பரிசீலித்து, அவர்களை முன் விடுதலை செய்ய ஒப்புதல் வழங்குமாறு கடிதம் எழுதியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு :-

சிறைவாசிகளின் முன்விடுதலை தொடர்பாக சட்டம் மற்றும் விதி களுக்குட்பட்டு பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய 113வது பிறந்த நாளினை முன்னிட்டு நீண்ட காலம் சிறைவாசம் அனுபவித்து வரும் 700 ஆயுள் தண்டனை சிறைவாசி களின் தண்டனையை, நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில், முன்விடுதலை செய்ய இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும், இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும், என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.09.2021 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவித்திருந்தார்கள். அதற்கேற்ப உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டு 556 ஆயுள் தண்டனை சிறைவாசி களின் நேர்வுகள் பரிசீலனை செய்யப்பட்டு 08.10.2023 வரை 335 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன்விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 8 நேர்வுகள், தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் நிராகரிக்கப்பட்டதால், அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 223 சிறைவாசி களின் நேர்வுகள் ஆளுநர் அவர்களின் ஒப்புதலின்றி திருப்பி அனுப்பப்பட்டு, அரசின் மறுபரிசீலனையில் இருந்து வருகின்றன.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டு சிறைவாசிகளில் 10/20 ஆண்டுகள் தண்டனை முடித்தும் பயன்பெற முடியாத ஆயுள் தண்டனை சிறைவாசிகள் மற்றும் வயது முதிர்ந்த சிறைவாசிகள், பல்வேறு இணைநோய்கள் இருக்கக்கூடிய உடல்நலம் குன்றிய சிறைவாசிகள், தீராத நோயுற்ற மற்றும் மனநலம் குன்றிய சிறைவாசிகள் மற்றும் மாற்றுத்திறனாளி சிறைவாசிகள் ஆகியோரின் நிலையை மனிதாபிமான அடிப்படையில் கருத்தில் கொண்டு அவர்களின் முன் விடு தலைக்கு உரிய பரிந்துரை வழங்க ஏதுவாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் என்.ஆதிநாதன் அவர்களின் தலைமையின் கீழ் 6 பேர் அடங்கிய ஒரு குழு, அரசாணை (நிலை) எண்.589, உள் (சிறை4) துறை நாள் 22.12.2021ல் அரசால், அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை 28.10.2022 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில், 264 ஆயுள்தண்டனை சிறைவாசி கள் குழுவால் முன்விடுதலைக்கு அரசுக்கு பரிந்துரைக்கப் பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, தற்போது பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளினை முன்னிட்டு, ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்விடுதலை செய்வதற்கு, அரசாணை எண்.430, உள்துறை, நாள் 11.08.2023ன்படி வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதன்படி, முதற்கட்டமாக, தகுதியுள்ள 49 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன் விடுதலைக்காக அரசால் பரிந்துரை செய்யப்பட்டு, தொடர்புடைய கோப்புகள் 24.8.2023 அன்று ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. ஆளுநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டவுடன், மேற்கண்ட சிறைவாசிகள் முன் விடுதலை செய்யப்படுவார்கள்.

இன்று தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவை விவாதத்தின்போது, உறுப்பினர்கள் சிலர் இஸ்லாமிய சிறைவாசிகள் உள்ளிட்ட நெடுநாள் சிறைவாசத்தில் உள்ள சிறைவாசிகளை விடுதலை செய்வது குறித்து சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அவர்கள் அனைவரையும் சட்ட விதிகளுக்குட்பட்டு விரைவில் விடுதலை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தினர்.

முதலமைச்சர் அவர்களும், உறுப்பினர்களின் கோரிக்கைகள் கவனத்துடன் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள்.

நெடுநாள் சிறைவாசம் அனுபவித்து வரும் சிறைவாசிகளை, மனிதாபிமான அடிப்படையில் சட்ட விதிகளுக்குட்பட்டு, முன்விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு தரப்பிலிருந்தும், அரசுக்கு தொடர்ந்து பெறப்பட்டு வருகிறது.

எனவே, தங்களுக்கு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ள ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் கோப்புகளை விரைவாகப் பரிசீலித்து, இந்திய அரசமைப்பின் உறுப்பு 161 இன் கீழ் முன் விடுதலை செய்ய ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டுள்ளார்.

### சேலத்தில் இளைஞர் அணி மாநாட்டில் கலந்துகொள்ளுதல் - இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை!

# மதுரை வடக்கு மாவட்டத்தில் - ஒன்றியம், நகரம் வாரியாக இளைஞர் அணி செயல்வீரர் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, அக். 12-

மதுரை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மதுரை - கிழக்கு தொகுதி, சோழவந்தான், மேலூர் ஆகிய தொகுதிகளில் டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு மற்றும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் குறித்த செயல்வீரர்கள் கூட்டம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது என மாவட்டச் செயலாளர் - வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

சேலத்தில் டிசம்பர்17 நடைபெறும் இளைஞரணி மாநில மாநாட்டில் கலந்துகொள்ளுதல், இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை குறித்து ஒன்றியம்/நகரம்/பகுதி/பேரூர் கழகங்களின் இளைஞரணி செயல் வீரர் கூட்டம்

**15.10.2023 - ஞாயிற்றுக் கிழமை**

**சோழவந்தான் சட்டமன்ற தொகுதி**

**வ. எண் ஒன்றியம் / பேரூர் நேரம் இடம்**

1. மதுரை மேற்கு 10 .00 AM - அமிர்தம் மஹால் - பாசிங்காபுரம்
2. சோழவந்தான் பேரூர் 11.00 AM - M.T.S.மஹால், சோழவந்தான்
3. வாடிப்பட்டி தெற்கு 12.00 PM - அன்னை திருமண மஹால், மேலக்கால்.
4. வாடிப்பட்டி பேரூர் 1.00 PM - ஜான்சி மஹால், வாடிப்பட்டி.
5. வாடிப்பட்டி வடக்கு - 1.30 PM - கார்த்தி விசாலாட்சி - செமினிப்பட்டி.
6. அலங்காநல்லூர் கிழக்கு - 3.00 PM - சுபிக் ஷா மஹால், அலங்காநல்லூர், பாலமேடு ரோடு,
7. அலங்காநல்லூர் மேற்கு 4.00 PM G R K மஹால், கேட்டுக்கடை.
8. அலங்காநல்லூர் பேரூர் - 4.30 PM - ராசு ஆசாரி மஹால், - அலங்காநல்லூர்.
9. பாலமேடு பேரூர் - 5.00 PM - திருமலை மன்னர் திருமண - மஹால், பாலமேடு.



**16.10.2023 -திங்கட்கிழமை**

**மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி**

1. மதுரை கிழக்கு - 10.00 AM - ராஜபதி மஹால் - திருமோகூர்
2. மதுரை கிழக்கு வடக்கு - 11.00 AM - தேவேந்திரர் மஹால் - கடச்சனேந்தல்
3 . கண்ணனேந்தல் - 12.00 PM - குறிச்சி மஹால் - திருப்பாலை
4. அனையூர் - 1.00 PM - ஜெயாமஹால்,ஹவு சிங்போர்டு - அனையூர்
5. வண்டியூர் - 3.00 PM - (ஸ்டார் மஹால்,
6. மதுரை மேற்கு வடக்கு - 5.00 PM - குறிச்சி மஹால் - திருப்பாலை
7. திருப்பாலை - 7.00 PM -பாண்டியன் பணால், உச்சபரம்மேடு

**17.10.2023 - செவ்வாய்க் கிழமை**

**மேலூர் சட்டமன்ற தொகுதி**

1. மேலூர் வடக்கு - 10.00 AM - சக்கரவர்த்தி மஹால் - தெற்கு தெரு.
2. மேலூர் தெற்கு - 11.00 AM - சமுதாயக் கூடம் - திருவாதவூர்
3. மேலூர் கிழக்கு - 12.00 PM - அண்ணாமலையார் - திருமண மஹால் - கீழையூர்
4. மேலூர் நகரம் - 1.00 PM - மூவேந்தர் பண்பாட்டுக் கழகம் - மேலூர்
5. கொட்டாம் பட்டி தெற்கு - 4.00 PM - சுரேஷ், செட் - மணப்பட்டி, கச்சிராயன்பட்டி
6. கொட்டாம் பட்டி கிழக்கு - 5.00 PM - ஊராட்சி திருமண மஹால் - கொட்டாம்பட்டி
7. கொட்டாம் பட்டி மேற்கு - 6.00 PM - வெள்ளாலபட்டி ஊர் - சமுதாயக்கூடம்
8. அ. வள்ளாலபட்டி - 6.30 PM - திருமண மஹால் - அ. வள்ளாலபட்டி பேரூர்

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.



தேனி வடக்கு மாவட்டம் போடி மேற்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் ஏற்பாட்டில் போடி மேற்கு ஒன்றிய பகுதிகளில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாமை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் துவக்கி வைத்தார் உடன் வடக்குமாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அஜிப் கான் மேல சொக்கநாதபுரம் பேரூர் செயலாளர் ராஜேந்திரன், மீனாட்சிபுரம் பேரூர் செயலாளர் செல்வம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பரணீஸ்வரன், தெய்வேந்திரன், ஜெயக்குமார், செல்லத்துரை, முத்துராம் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு வீட்டு வசதிவாரியம் மூலம்

# இராமநாதபுரம் தொகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகள்!

## சட்டப் பேரவையில் - காதர்பாட்சா முத்துராமலிங்கம் வலியுறுத்தல்!

சென்னை, அக்.12-

**சட்டப் பேரவையில், நேற்று முன்தினம் (அக்.10) கேள்வி நேரத்தின்போது கழக உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், 'இராமநாதபுரம் தொகுதியில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட வேண்டும்' என வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

சட்டப்பேரவையில் இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** இராமநாதபுரம் தொகுதியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் சு.முத்துசாமி:** இராமநாதபுரம் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலம் ஏதுமில்லை. எனவே, புதிதாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுகிற திட்டம் தற்போது இல்லை.

**காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி என்பது அந்த மாவட்டத்தினுடைய தலைமையிடமாக இருப்பதனால், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதியை ஏற்பாடு செய்து தந்திட நமது துறையின் சார்பாக இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட 25வது வார்டு மூலக்கொத்தளம் என்னும் இடத்தில் ஏற்கெனவே வீட்டுவசதி வாரியக் கட்டடத்தின் கட்டடங்கள் இருக்கின்றன. 25 ஆண்டுகள் பழமையுற்றதால் அது இடிக்கப்பட்டு, 25வது வார்டில் தற்போது காலியிடமாக இருக்கின்றது. அந்த இடத்தை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டும்.



**அமைச்சர் சு.முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 2, 3 திட்டங்கள் அங்கே செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. அதிலே சுயநிதித் திட்டத்தின் மூலமாக நிலங்கள் விற்கப்பட்டிருக்கிறது. அடுக்குமாடிக் குடியிருப்புகள் அரசுப் பணியாளர்களுக்காக வாடகைக் குடியிருப்புகளுக்காக கட்டித் தரப்பட்டிருக்கிறது. அதிலே ஏறத்தாழ 1,032 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஏற்கெனவே இருந்தன. ஆனால், அதெல்லாம் மிகவும் மோசமடைந்துவிட்ட காரணத்தால் 594 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிக்கப்பட்டுவிட்டன. மீதமிருக்கிற 438 அடுக்குமாடிக் குடியிருப்புகளும்கூட இடிக்கிற நிலையிலேதான் இருக்கிறது. எனவே, எல்லாவற்றையும் இடித்துவிட்டு புதிதாக அங்கே கட்டடம் கட்டுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவைகள் கட்டப்படுகிறபோது அங்கே தேவையான வீடுகள் அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கும். கூடுதலாகக் கிடைப்பதற்குக் கூட வாய்ப்பு இருக்கிறது.

**காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** அமைச்சர் அவர்கள் சொன்ன இடம் என்பது மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திலுள்ள திருவாடனை தொகுதிக்குட்பட்ட பகுதி. நான் கோரிக்கை வைப்பது இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட 25வது வார்டிலே நம்முடைய காலியிடங்கள் இருக்கின்றன. ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அந்த இடத்தில் புதியதாக ஒரு கட்டடம் கட்ட வேண்டும்.

அதேபோன்று, இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராமேஸ்வரம் பகுதியானது தற்போது வளர்ந்து வரக்கூடிய ஒரு பகுதியாக இருக்கின்றது. சுமார் இராமநாதபுரத்திலிருந்து 60 கிலோ மீட்டர் இராமேஸ்வரத்திற்கு இடைப்பட்ட இடமாக இருந்தாலும் அங்கும் பல்வேறு அரசுத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அங்கு நம்முடைய துறையின் சார்பாக காலியிடங்கள் இருக்கிறது?

**அமைச்சர் சு.முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமாக எங்கெங்கே இடமிருக்கிறதோ, அங்கே தேவைக்கேற்ப கட்டுவதற்கான நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும்.

முதலில் அரசுப் பணியாளர்களுக்கு வாடகைக்குக் கொடுப்பதற்காக எடுக்கிறபோது, அங்கு எவ்வளவு பணியாளர்கள் இருக்கிறார்கள், அவர்களிடத்தில் என்ன demand இருக்கிறது என்பதைப் பார்த்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம். பிற திட்டங்களுக்கு, அதே போல மக்களிடத்தில் விசாரித்து, அதற்குப் பின்னர் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி கட்டப்பட்ட பல கட்டடங்கள் விற்கப்படாமல், அப்படியே பழுதடைந்து இடிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, உடுமலைப்பேட்டையில் 101 வீடுகளைத் தனித் தனியாக கட்டியுள்ளார்கள். அந்த 101 வீடுகளும் விற்கவில்லை. இன்றைக்கு அதை முழுவதுமாக இடிக்கவேண்டிய நிலை உள்ளது. எனவே, இதை முழுமையாக ஆய்வு செய்து, அங்கே உள்ள தேவைக்கேற்ப வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ.சு. மணி

### அக்டோபர் 12 (1962)



சென்னை 57வது வட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்

மும்முனைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்.

விலைவாசி போராட்டத்தில் பங்கேற்று சிறையில் இருந்தபோது சிறைக் கைதிகளால் தாக்கப்பட்டு மரணமடைந்தார்.

தலைவர் கலைஞர் அவர்களால் 'கொள்கை குன்று' எனப் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

மகத்தான இந்த மனித நேயத் திட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவோம்! உயரிய எண்ணத்தோடு நாம் ஒருங்கிணைந்து செயல்படுவோம்!

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் வெற்றி ; தமிழ்நாட்டு மகளிரின் வெற்றி!

## சட்டப்பேரவை விளக்க உரையில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, அக்.12 -

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' தொடர்பான சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றிய, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மகத்தான இந்த மனித நேயத்திட்டத்தின் வெற்றியை உறுதிப் படுத்துவோம்! உயரிய எண்ணத்தோடு நாம் ஒருங்கிணைந்து செயல்படுவோம்! என்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் வெற்றி; தமிழ்நாட்டு மகளிரின் வெற்றி! என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய பதிலுரை வருமாறு:

முதலமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்திய ஒன்றியமே பாராட்டி, பின்பற்றிக் கொண்டிருக்கக்கூடிய, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் பற்றி (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்களான, தோழர் அண்ணன் நாகைமாலி அவர்களும், காங்கிரஸ்பேரியக்கத்தைச்சார்ந்த அண்ணன் ஜே.ஜி.பிரின்ஸ் அவர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் உதயகுமார் அவர்களும் அளித்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பிற்குப் பதில் அளிப்பதிலே நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

அண்ணன் நாகைமாலி அவர்கள் நாகை மாவட்டத்தைச் சார்ந்தவர். இன்னும் சொல்லப்போனால், முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த திருக்குவளை கிராமமே அண்ணனுடைய கீழ்வேளூர் சட்டப்பேரவைத் தொகுதியில்தான் வருகிறது. அந்தவகையில், அவர் எங்கள் அத்தனை பேருக்கும் சட்டமன்ற உறுப்பினர். விவசாயக் கூலி வேலைகளைச் செய்யும் மகளிர் நிறைந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்.

அதேபோல, மீனவப் பெண்கள் நிறைந்த குளச்சல் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

அவர்கள் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய 115 வது பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் தேதி அன்று கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைக் காஞ்சிபுரத்தில் துவங்கி வைத்தார்கள். 1 கோடியே 6 இலட்சத்து 52 ஆயிரத்து 198 மகளிருடைய வங்கிக் கணக்கில் ஒரே நேரத்தில் தலா ஆயிரம் ரூபாய் வீதம், ஆயிரத்து அறுபத்து ஐந்து கோடி ரூபாய் வரவு வைக்கப்பட்டது. இது தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இது முதல் முறையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தைத் தந்த முதலமைச்சர் அவர்களை தமிழ்நாடு மகளிர் ஒவ்வொருவரும் கொண்டாடி வருகின்றனர், பாராட்டி வருகின்றனர். இந்தத் திராவிட மாடல் சாதனையை இந்தியாவின் பல மாநிலங்கள் இப்போது பின்பற்றி வருகின்றன. முதலமைச்சர் அவர்களுக்கு கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டில் துவங்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்று கலைஞருடைய பெயரில் அனுமதி அளித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைச் செயல்படுத்தும் வாய்ப்பை நம்முடைய சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைக்குத் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இரவு பகல் பாராமல் உழைத்த நம்முடைய தலைமைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து அமைச்சர்கள், அதிகாரிகள், தன்னார்வலர்கள் என அத்தனை பேருக்கும் நான் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஏனென்றால் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திய ப்ராசஸ் மிகவும் பெரியது; இன்னும் சொல்லப்போனால் புதியது.

### வெளிப்படைத் தன்மை

ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று விண்ணப்பங்களை வழங்கியதில் ஆரம்பித்து, மகளிரை விண்ணப்பப் பதிவு நடைபெறுகின்ற முகாம்களுக்கு வரவைத்து அவர்களுடைய விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவு செய்தோம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு ஒரு கோடியே 62 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அந்த விண்ணப்பங்களின் அடிப்படையில் களஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மிகவும்



கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமானது தமிழ்நாடு மகளிர் உழைப்பிற்கு அங்கீகாரம் மட்டுமின்றி, மகளிர் சமூகத்தில் சுயமரியாதையோடு வாழவும், சுதந்திரமாகவும், தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்கொள்ளும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் பயன்பெறத் தகுதியுள்ளவர்கள் மாதம் ஆயிரம் ரூபாய் என்கின்ற வீதம் ஆண்டுக்கு ரூபாய் 12 ஆயிரம் இந்தத் திட்டத்தின் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. இந்தத் தொகையானது உண்மையிலேயே யாருக்குப் பயனுள்ளதாக இருக்குமென்பதை தீர்மா

பார்த்துச் செயல்படுத்தி வருகிறார்கள். முதலில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டதும் களத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற feedbacks அடிப்படையில் ஒவ்வொரு விஷயத்தையும் சரிசெய்தார்கள். அந்த வகையில்தான் மாற்றுத்திறனாளிகள் குடும்பத்தினர், திருநங்கையர், முதியோர் உதவித்தொகை பெறுவோர் கொண்ட குடும்பத்தினரும் பயனடையும் வகையில் இந்தத் திட்டத்தின் விதிகள் மாற்றியமைக்கப்பட்டன.

இந்த நேரத்தில் ஒரு முக்கியமான தகவலைப் பதிவு செய்ய விரும்புகின்றேன். முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பின்படி நிபந்தனைகள் தளர்த்தப்பட்டதன் காரணமாக 2,06,000 மாற்றுத் திறனாளிகள் குடும்பங்களும், 4,72,000 முதியோர் ஓய்வூதியம் பெறும் குடும்பங்களும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தில் பயன்பெற்றுள்ளனர். மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து என்று முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்ட போது, மகளிர்மட்டுமன்றிதிருநங்கைகளும், திருநம்பிகளும் கட்டணமின்றி பயணிக்கின்ற நிலையை ஏற்படுத்தினார்கள்.

எனப் பிடித்தம் செய்வதாக சில புகார்கள் வந்தன. அதனைத் தடுக்கும் வகையில் உடனடியாக வங்கியாளர்கள் குழுமக் கூட்டத்தை நடத்தி, அதில் வங்கிகள் தங்களது நிர்வாகச் செலவினங்களுக்கோ அல்லது பயனாளிகள் ஏற்கெனவே பெற்ற கடன்களுக்கோ பிடித்தம் செய்யக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டது. இது குறித்து, வங்கிகளுடன் மாநில அரசு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் (MoU) செய்துள்ளது. இந்தத் தகவலை அந்தந்த வங்கிகளுக்குத் தெரிவித்து, பிடித்தம் செய்யப்பட்ட தொகையை மீண்டும் பயனாளிகளுடைய வங்கிக் கணக்குகளுக்குத் திரும்பச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### மேல்முறையீடு

மாநில அரசினுடைய நிதியை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள வங்கிகள் பிடித்தம் செய்யக் கூடாது என்பதை ஒன்றிய நிதி அமைச்சகத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்றுள்ளோம். பொதுவாக, எந்தத் திட்டத்திலும் திட்டப் பயனாளிகள் தேர்வு குறித்து மேல்முறையீடு செய்வதற்கு வழிவகை இருக்காது. ஆனால், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில்,

விண்ணப்பிக்காத பயனாளிகளும் இத்திட்டத்தில் விண்ணப்பிக்கலாம். அதற்கான அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்படும்.

### கவனமாகச் செயல்படும் கழக அரசு

எந்தவொரு தகுதியான பயனாளிகளின் பெயரும் விடுபட்டுவிடக் கூடாது என்ற நோக்கத்தோடு நம்முடைய கழக அரசு மிகக் கவனமாகச் செயல்பட்டு வருகின்றது. அந்தந்தத் தொகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் விதிகளைப் பூர்த்தி செய்கின்ற மகளிரை இத்திட்டத்தின்கீழ் பயனடையச் செய்வது, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுடைய பொறுப்பு, கடமை, உரிமை ஆகும். ஆகவே, உங்களுடைய சட்டமன்றத் தொகுதியில் எல்லா நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும், மகளிர் யாரேனும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்திலிருந்து விடுபட்டிருந்தால் உடனடியாக அது தொடர்பான தகவல்களை நம்முடைய சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளரிடம் அளிக்கலாம்.

எந்தத் தொகுதியிலிருந்து எத்தனை மனுக்கள் வந்தாலும்

## 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்' விதிகளைப் பூர்த்தி செய்கிற அத்தனை மகளிருக்கும் உரிமைத் தொகை பெற்றுத் தருவது ; ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் கடமை! பொறுப்பு! உரிமை!

னிக்க, கழக அரசு மிகக் கவனமுடன் ஆய்வு மேற்கொண்டு, அந்த ஆய்வுகளின்படிதான் பயனாளிகள் வகைப்படுத்தப்பட்டனர்.

### சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க உதவி மையம்!

வருமான வரி செலுத்துபவர்கள், அரசு ஊழியர்கள், அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள், பெரும் தொழில் நிறுவனம் நடத்துபவர்கள், சொந்தப் பயன்பாட்டிற்கு car கள் வைத்திருப்பவர்கள், 10 ஏக்கருக்குமேல் நிலம் வைத்திருப்பவர்கள், ஆண்டிற்கு இரண்டரை இலட்சத்திற்குமேல் அதிகமான வருமானம் ஈட்டுகின்ற பிரிவினர் மட்டுமே இந்தத் திட்டத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் என்று வகைப்படுத்தப்பட்டனர்.

விண்ணப்பம் ஏற்கப்படவில்லை என்பதற்கான காரணங்களை சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர் செல்போன் எண்ணிற்கே அரசு சார்பில் அனுப்பிவைக்கப்பட்டது. அந்த வகையில் விண்ணப்பித்த ஒரு கோடியே 63 இலட்சம் பேரில், 54 இலட்சம் பேர் திட்ட நிபந்தனையைப் பூர்த்தி செய்யாதவர்களாயினர். மேலும் இந்தத் திட்டம் குறித்த சந்தேகங்களுக்கு

### திருநங்கையருக்கு மகளிர் உரிமைத் தொகை!

அதேபோலவே, இன்றைக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழும் திருநங்கையர் பயனடையலாம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்

மேல்முறையீடு செய்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

எந்தவொரு தகுதியான மகளிரும் உரிமைத்தொகையைப் பெறுவதிலிருந்து விடுபட்டுவிடக் கூடாது என்ற உயரிய நோக்கத்தோடு மேல்முறையீடு செய்து,

> எந்தத் தொகுதியிலிருந்து எத்தனை மனுக்கள் வந்தாலும் அதனைக் கள ஆய்வு செய்து இந்தத் திட்டத்தின் விதிகளைப் பூர்த்தி செய்யும் மகளிருக்கு நிச்சயம் கலைஞர் உரிமைத் தொகைத் திட்டத்தின்கீழ் உரிமைத்தொகை சென்றடையும் என்ற உறுதிமொழியை முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தற்போது, இந்தநேரத்தில் மீண்டும் நானும் உறுதியளிக்கின்றேன்.

துள்ளார்கள். திருநங்கையர்களுடைய விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு அவர்கள் இந்த விதிமுறைகளுக்கு ஏற்றவர்களாக இருக்கின்ற பட்சத்தில் அவர்களுக்கும் உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பயனைப் பெறலாம் என்ற நிலையை நம்முடைய அரசு ஏற்படுத்தியுள்ளது.

எனவே, ஏற்கப்படாத விண்ணப்பதாரர்கள் தாங்கள் இத்திட்டத்தில் பயனாளியாகத் தகுதியானவர்கள் என்று எண்ணுகின்ற பட்சத்தில் அவர்கள் 'இ'-சேவை மையங்கள் மூலம் மேல்முறையீடு செய்யலாம். தமிழ்நாடு முழுவதிலுமிருந்து இதுவரை, 9,24,000 மேல்முறையீட்டு மனுக்கள் வந்துள்ளன. இந்த மனுக்களை சம்பந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலர்கள் ஆய்வு செய்து நவம்பர் 30 ஆம் தேதிக்குள் உரிய தீர்வினை அளிப்பார்கள் என்பதை இங்கு கூற விரும்புகிறேன்.

இந்த மேல்முறையீட்டுப் பணிகளை மேற்கொள்ள வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு 12-10-2023 அன்று மறுநாள் வியாழக்கிழமை அன்று சிறப்புப் பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது.

அதுமட்டுமல்ல, ஏற்கெனவே

அதனைக் கள ஆய்வு செய்து இந்தத் திட்டத்தின் விதிகளைப் பூர்த்தி செய்யும் மகளிருக்கு நிச்சயம் கலைஞர் உரிமைத்தொகைத் திட்டத்தின்கீழ் உரிமைத்தொகை சென்றடையும் என்ற உறுதிமொழியை முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தற்போது, இந்தநேரத்தில் மீண்டும் நானும் உறுதியளிக்கின்றேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் வெற்றி என்பது தமிழ்நாட்டு மகளிருடைய வெற்றியாகும். இதனை உறுதிப்படுத்த வேண்டுமென்ற உயரிய எண்ணத்தோடு நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவோம் என்று இம்மாமன்றத்தின் வாயிலாக அழைப்பு விடுக்கின்றேன்.

இத்திட்டத்தின் பயனாளியாகக் கூடியவர்கள் யார், யார் என்பதை அரசு எடுத்துக் கூறியதும், தமிழ்நாட்டில் மொத்தம் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களில் 64 இலட்சம் அட்டைதாரர்கள் தாங்களாகவே புரிந்துகொண்டு இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பம் ஏதும் அளிக்கவில்லை. அவர்களுக்கு இந்நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## விண்ணப்பிக்காத மகளிர் புதிய விண்ணப்பங்களைத் தரலாம்! விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படாதவர்கள் மேல்முறையீடு செய்யலாம்!

### தமிழ்நாடு வரலாற்றிலேயே முதல்முறை!

ஆகவேதான், தகுதியுள்ள உழைக்கும் மகளிர் அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் பயன்கள் சென்றடைய வேண்டுமென்ற அக்கறையுடன் இந்தக் கவன ஈர்ப்பை அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள்.

'சொன்னதைச் செய்வோம், செய்வதை மட்டுமே சொல்வோம்' என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வழியில் நம்முடைய முதலமைச்சர்

வெளிப்படைத்தன்மையுடன் எந்த ஒரு அழுத்தமோ, குறுக்கீடோ இல்லாமல் முழுக்க முழுக்க தகுதி வாய்ந்த 1,06,52,198 மகளிர் இந்தத் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டார்கள்.

குடும்பத்திற்காக தங்கள் வாழ் நாளெல்லாம் எந்தவித பிரதிபலனும் பாராமல், எதிர்பார்க்காமல், ஓயாமல் உழைக்கும் மகளிருடைய உழைப்பை அங்கீகரிக்கும் விதமாகத்தான் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விளக்கம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 1,400 உதவி மையங்களும் ஏற்படுத்தப்பட்டன.

யார் யாருக்கெல்லாம் இந்த ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துமோ அவர்களைக் கண்டறிந்து அரசின் நிதியை கவனமுடன் கையாண்டு, மிகச் சரியான பயனாளிகளுக்கு வழங்க கழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பார்த்துப்

குடும்ப அட்டையில் பாலினத்தை மாற்றாத காரணத்தால் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் பயனடையும் வாய்ப்பை இழந்த 890 திருநங்கையர் அடையாளம் காணப்பட்டு அவர்களும் இந்தத் திட்டத்திற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

அதுமட்டுமன்றி, மாநில அரசு வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத் தொகையை மினிமம் பேலன்ஸ் வைத்திருக்கவில்லை, ஏற்கெனவே எடுத்த லோனுக்கு EMI செலுத்தவில்லை

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கத் தகுதியைப் பெறுகின்ற அனைத்து மகளிரும் பயனடையும் வகையில் இந்த அரசு செயல்படும் என்பதை சட்டமன்ற உறுப்பினர்கள், அண்ணன் நாகை மாலி, அண்ணன் பிரின்ஸ் மற்றும் அண்ணன் உதயகுமார் அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், நிதித் துறைச் செயலாளர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளக்கவுரையாற்றினார்.

# வந்தவாசி தொகுதியில் - கோரைப்பாய் நெசவுப் பூங்கா அமைத்திடுவீர்!

## சட்டப் பேரவையில் - எஸ்.அம்பேத்குமார் வலியுறுத்தல்!



சென்னை, அக். 12 - சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் நடைபெற்ற கேள்வி நேரத்தின் போது, வந்தவாசி தொகுதி கழக உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், தமது தொகுதியில் கோரைப்பாய் நெசவுப் பூங்கா அமைத்திடுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப் பேரவையில் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**எஸ்.அம்பேத்குமார்:** வந்தவாசி தொகுதியில் கோரைப்பாய் நெசவுப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் ராஜகண்ணப்பன்:** கதர் வாரியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் வந்தவாசி மத்திய பாய் நெசவாளர்கள் மற்றும் கோரை உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் 16.12.1962 முதல் செயல்பட்டு வருகிறது. அது தற்போது 1,000 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

இச்சங்கத்தில் உற்பத்தியாகும் கோரைப் பாய்கள் காதி கிராப்ட், அரசு மருத்துவமனைகள், சர்வோதய சங்கங்கள், சிறைத் துறைகள், அரசுப் பள்ளிகள், கல்லூரி விடுதிகள், அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் வாரியத்தால் நடத்தப்படும் கண்காட்சிகள் ஆகியவற்றின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

வந்தவாசி மற்றும் அதன் சுற்றுப்புற கிராம மக்கள் விசைத்தறி மூலம் பாய்களை நெசவு செய்து வருகிறார்கள்.

இச்சங்கத்தின் பாய் வகைகள் கதர் வாரியத்தின் வழிகாட்டுதலின்படி, உரிய வகையில் சந்தைப்படுத்தப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருவதால், புதிதாக கோரைப்பாய் நெசவுப் பூங்கா அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**எஸ்.அம்பேத்குமார்:** இராஜபாளையத்திற்கு நாய் famous என்றால், வந்தவாசிக்கு பாய் famous ஆக இருக்கிறது. அப்படிப்பட்ட அந்த பாய் நெசவாளர்கள் பெரும்பாலோர், வந்தவாசியில் சிறு தொழிலாக பல நூறு ஆண்டுகாலமாக செய்து வருகின்ற காரணத்தினால், அந்த பாய் நெசவாளர் தொழிலை மேம்படுத்தும் வகையில் பாய் நெசவாளர்களுக்கு ஒரு பாய் நெசவாளர் பூங்கா அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா?

**அமைச்சர் ராஜகண்ணப்பன்:** வந்தவாசி தொகுதியில் உள்ளவர்கள் குறைந்தபட்சம் 25 நபர்கள் ஒன்று சேர்ந்து, புதிதாக கூட்டுறவுச் சங்கம் அமைக்க விருப்பம் தெரிவிக்கும்பட்சத்தில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்மூலம் தொழிற்சங்கம் பதிவு செய்து, அதன் மூலம், பாய் நெய்வோர்களுக்குத் தேவையான பயிற்சியுடன் கூடிய அனைத்து உதவிகளும் செய்யப்படும். நம்முடைய ஆட்சிக் காலத்தில்தான், கதர்த் துறையின் வருமானம் ரூபாய் 228 கோடியிலிருந்து ரூபாய் 427 கோடியாக உயர்ந்திருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்களுடைய சிறப்பான ஆட்சியிலேதான் இத்துறை மிகவும் சிறப்பாக செயல்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய கூட்டுறவு சங்கம் அமைக்க இடம் தருகின்றபட்சத்தில், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்.அம்பேத்குமார்:** தமிழ்நாட்டில் பல லட்சம் பேர் பாய் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். வந்தவாசியில் முதன்முதலாக கோரைப்பாய் நெசவாளர் பூங்கா அமைக்கப்படுமா? சிறுபான்மை மக்கள் குறிப்பாக இஸ்லாமிய சகோதர, சகோதரிகளில் பெரும்பாலோனோர் பாய் நெசவுத் தொழிலில் ஈடுபடுவதால், சிறு பான்மையினர் நலத் துறையின் மூலமாகவோ அல்லது அரசு சிறப்புக் கவனம் செலுத்தியோ முதன்முதலாக வந்தவாசியில் ஒரு பாய் நெசவாளர் பூங்காவை அமைத்துத்தர வேண்டும்.

**அமைச்சர் ராஜகண்ணப்பன்:** திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை கிராமத்தில் சிறுபான்மையின மக்களுக்கும், இஸ்லாமிய மக்களுக்கும் மிகப்பெரிய பாய் உற்பத்தி செய்யும் சங்கம் இருக்கின்றது. அதேபோல், வந்தவாசியிலும் சிறுபான்மையின மக்கள் நிறைய பேர் வசிக்கிறார்கள். அவர்கள் விரும்புகின்ற பட்சத்தில், அவர்கள் இடம் வழங்குகின்ற பட்சத்தில், தொழிலாளர்களுக்கு உதவிடும் வகையில், அங்கு தொழிற்கூடம் அமைத்திட அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக சிறு பான்மையின மக்களின் கோரிக்கைகளை நம்முடைய அரசு நிறைவேற்றும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்,

# கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி!

## சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரை!

திருவண்ணாமலை, அக். 12 - திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பள்ளி மாணவர்களுக்கான முத்தமிழறிஞர் கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி நடைபெறவுள்ளது. போட்டிகளை கழக மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தொடங்கி வைக்கிறார். மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சட்டப் பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்றும், பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பள்ளி மாணவர்களுக்கான முத்தமிழறிஞர் கலைஞரின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி, 13.10.2023 வெள்ளிக்கிழமை காலை 9.00மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெறவுள்ளது.

கவிதை ஒப்பித்தல் போட்டிக்கு மாவட்ட அமைப்பாளர் டி.வி.எம்.நேரு தலைமை வகிக்கிறார்.

மாவட்ட தலைவர் ஜெ. பாலாஜி மாவட்ட துணை அமைப்பாளர்கள் இரா. ஜோதி, மு.அம்பேத்கர், மு. பலராமன், கா.சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மாவட்ட துணை தலைவர் ஆ.தே.முருகையன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

போட்டியினை கழக மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தொடங்கி வைக்கிறார்.

போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு கழக தணிக்கைக்குழு உறுப்பினரும், சட்டப்பேரவை துணைத்தலைவருமான கு. பிச்சாண்டி அவர்கள் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரை யாற்றுகிறார்.

போட்டியில் மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாநில துணைச் செயலாளர் கே.வி.குப்பம்.சி. கோபி, தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட துணை செயலாளர் மு. பெ.கிரி எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் பெ. சு.தி.சரவணன் எம்.எல்.ஏ, மாவட்ட பொருளாளர் எஸ். பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப. விஜயரங்கன், விஜய லட்சுமி ரமேஷ், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பார்வதி சீனுவாசன், மாநில தொ.மு.ச. பேரவைச் செயலாளர் க.சௌந்தர ராசன், நகர செயலாளர்ப.கார்த்திவேல்மாறன், மாநில செய்தி தொடர்பு இணை செயலாளர் சிவ. ஜெயராஜ், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் பாரதிராமஜெயம் ஆகியோர் வாழ்த்தி பேசுகின்றனர்.

மாவட்ட அமைப்பாளர்கள் காலேஜ் ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் ம.பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், பொன். தனுசு, சு.விஜி (எ) விஜியராஜ், எச்.சாதிக்பாஷா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, ஜெ.மெய்கண்டன், இரா. கார்த்திகேயன், பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபல்யூ.சர்தார்காசிம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே. ஏ.அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா, ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப. கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த. செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கோ.கண்ணன், து.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், கா.சு. இளங்கோவன், அன்பரசி ராஜசேகர், பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம். சீனுவாசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சு.ராஜாங் கம், எஸ். கண்ணதாசன், கோ.ராஜ சேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.திலீப்குமார், நகர மன்ற தலைவர் நிர்மலாவேல் மாறன், ஒன்றியக்குழு தலைவர்கள் கலைவாணிகலைமணி, பரிமளா கலையரசன், நகர நிர்வாகிகள் சி.சண்முகம், மு.கருணாமூர்த்தி, வட்டி அ.அருணாசலம், ஜீவ ரேகாவிஜயராஜ், ந.சீனு வாசன், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு எஸ்.பிரபு, ஹக்கீம்சேட் மற்றும் பள்ளி மாணவர்கள், ஆசிரியர் பெருமக்கள் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக மாவட்ட துணை அமைப்பாளர் தண்டராம்பட்டு ரவி நன்றி கூறுகிறார். முன்னதாக செல்லங்குப்பம் சுப்பிரமணியின் நாட்டுப்புற பாடல் நடைபெறவுள்ளது.

---

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை:

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் அறிவிப்பு!



கழக இளைஞரணி மாநிலச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகையை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம், இன்று (12.10.2023 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணிக்கு நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் எனது (கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ்) தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக பால்வளத்துறை அமைச்சர், கன்னியாகுமரி மேற்கு மாவட்டச் செயலாளர் த. மனோதங்கராஜ் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

இந்த கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட மற்றும் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** 1. கழக இளைஞரணி மாநில செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தொடர்பாக. 2. கழக இளைஞர் அணி செயல் வீரர் கூட்டம் மற்றும் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல் தொடர்பாக. 3. கலைஞர் நூலகம் திறப்பது தொடர்பாக. 4. கழக ஆக்கப்பணிகள் குறித்து

**மேயர் ரெ.மகேஷ்**
செயலாளர்
கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க.

---




தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தொழில்துறை சார்பில் சென்னை லீலா பேலஸில் நேற்று முன்தினம் (10.10.2023) நடைபெற்ற தொழில் நிறுவனங்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் (INDUSTRY ENGAGEMENT MEET) நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த TCS, HCL TECHNOLOGIES PEGATRON TECHNOLOGY, WIPRO மற்றும் Southerland ஆகிய நிறுவனங்களை பாராட்டி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் நினைவுப் பரிசு வழங்கினர்.



கழக இளைஞரணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் மா.கிரகாம்பெல் தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம் எம்.பி., ஆ.பிரபாகரன், மாவட்டப் பொருளாளர் ஜார்ச்கோசல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று சிறப்பான வரவேற்பு கொடுப்பது தொடர்பாகவும், கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குவது குறித்தும், இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் இளைஞர்கள் அதிக அளவு கலந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். நிகழ்வில் ஆவின்ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், எரிக்ஜூடு, மைக்கேல், தமயந்தி உள்பட பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி

# கழக சட்டத்துறை சார்பில் 3வது மண்டல பேச்சுப்போட்டி!

## மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி.அறிவிப்பு!

சென்னை, அக். 12 - தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க தி.மு.க. சட்டத்துறைச் சார்பில் “தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா” வினையொட்டி 3வது மண்டல பேச்சுப் போட்டி நடைபெறுகிறது என தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, எம்.பி., அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

“தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா”வினையொட்டி தி.மு.க. சட்டத்துறையின் சார்பில்,சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப் போட்டிகளை கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமே நடத்தப்படும்.

**போட்டிகளுக்கான தலைப்புகள் பின்வருமாறு**

1.கலைஞரின் பார்வையில் சமூக நீதி,

2.கலைஞரின் பார்வையில் மாநிலசுயாட்சி,

3.கலைஞரின் பார்வையில் மகளிர் முன்னேற்றம்,

4.கலைஞரின் பார்வையில் தொழில் வளம்,

5.கலைஞரின் பார்வையில் கல்வி.

மேற்சொன்ன இந்த ஐந்து தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பினை போட்டி துவங்குவதற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்பு போட்டி நடத்தும் நடுவர்கள் அறிவிப்பார்கள்.

அந்த தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்குமிகாமல் தமிழில் பேசிடவேண்டும். மாநிலம் முழுதும் உள்ள சட்ட கல்லூரிகளை ஆறு மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தில் நடைபெறும் தேதி, இடம் ஆகியவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதில் முதல் மண்டல பேச்சுப் போட்டி நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து தற்போது 3வது மண்டலப் பேச்சுப் போட்டி கீழே குறிப்பி டப்பட்டுள்ள விவரத்தின்படி நடைபெறும்.

போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும்

முதல் பரிசு - ரூபாய் 50,000/ தங்கப் பதக்கம், சான்றிதழ்,

இரண்டாம் பரிசு - ரூபாய் 25,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்,

மூன்றாம் பரிசு - ரூபாய் 15,000/தாமிரப் பதக்கம், சான்றிதழ்,

இரண்டு ஆறுதல் பரிசு - ரூபாய் 5,000/ வெண்கலப் பதக்கம், சான்றிதழ். வழங்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) “மாநில அளவிலான இறுதிப் போட்டி” வருகிற 6.12.2023 (புதன்கிழமை) அன்று நீலாங்கரை, “ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில்” நடைபெறும்.

மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியிலிருந்து பங்கு பெற விரும்பும் மாணவர்களின் பட்டியலினை, தங்கள் மண்டலத்தின் போட்டி நடைபெறும் நாளுக்குமுன்புகீழே குறிப்பிடப்பட்டுள்ள “பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்களிடம்” ஒப்படைக்க வேண்டுகிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் பெயர் அளிக்க முடியாத மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் நேரடியாக உரிய அடையாள அட்டை அல்லது கல்லூரி முதல்வரின் அனுமதி கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு

முதல் பரிசு - ரூபாய் 1,00,000/ தங்கப் பதக்கம், சான்றிதழ்,

இரண்டாம் பரிசு - ரூபாய் 50,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்,

மூன்றாம் பரிசு - ரூபாய் 30,000/ தாமிரப்பதக்கம், சான்றிதழ்,

இரண்டு ஆறுதல் பரிசு - ரூபாய் 10,000/= வெண்கலப்பதக்கம், சான்றிதழ்.

**பேச்சுப்போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்**

கே.எஸ்.இரவிச்சந்திரன் - சட்டத்துறை இணைச் செயலாளர் - 9840022250

ஜெ.பச்சையப்பன் - சட்டத்துறை துணைச் செயலாளர் - 9840260178

கே.சந்துரு - சட்டத் துறை துணைச் செயலாளர் - 9444006999

கே.ஜே.சரவணன் - தலைமைக் கழக வழக்கறிஞர் -9841057345

3வது மண்டலபேச்சுப் போட்டி

போட்டி நடைபெறும் தேதி, இடம் ஆகிய விவரங்கள்

14.10.2023 - (மாணவர்கள்) 1. அரசு சட்டக் கல்லூரி, சேலம் (இடம்)

2. அரசு சட்டக் கல்லூரி, வேலூர்

3. அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி

4. அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர்

5. மத்திய சட்டக் கல்லூரி, சேலம் (தனியார்)

6. அரசுசட்டக்கல்லூரி, நாமக்கல்

7. கே.எம்.சி. சட்டக்கல்லூரி, திருப்பூர் (தனியார்)

8. ஈரோடுசட்டக்கல்லூரி, ஈரோடு (தனியார்)

9. காருண்யாபல்கலைக்கழகம், கோயமுத்தூர்

15.10.2023 - (வழக்கறிஞர்கள்) - தகுதி -வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், கோவை, நாமக்கல், திருப்பூர், ஈரோடு ஆகியமாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்து மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் உள்ள இளம் வழக்கறிஞர்கள் இடம் - கலைஞர் அறிவாலயம், சேலம் மாவட்டக் கழக அலுவலகம், சேலம்.

---



தமிழ்நாட்டில் பட்டாசுத் தொழிலில் – வருங்காலத்தில்

# விபத்து ஏதும் நிகழாத சூழ்நிலையை கழக அரசு ஏற்படுத்தும்!

## சட்டப்பேரவையில் - வருவாய் - பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் உறுதி!

**சென்னை, அக்.12-**

**சட்டப் பேரவையில், நேற்று முன்தினம், பட்டாசு விபத்துகள் குறித்து கொண்டு வரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்துக்குப் பதில ளித்துப் பேசிய, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், "தமிழ்நாட்டில் பட்டாசு தொழிலில், இனிமேல் விபத்து ஏதும் நிகழாத சூழ்நிலையை கழக அரசு ஏற்படுத் தும்!" என உறுதியளித்தார்.**

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், இது குறித்து விவாதத்திற்குப் பதி லளித்து வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன் குறிப் பிட்ட தாவது :-

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அரசின் கவனத்தை ஈர்த்தது மட்டு மல்லாமல், நடந்த சோகச் சம்பவத்திற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக தகுந்த உத்தர விட்டு, தகுந்த நடவடிக்கை எடுத்தது மட்டுமல்லாமல், இறந்தவர்கள் தவிர, மீதி காயப்பட்டவர்களுக்கெல் லாம் சிறந்த மருத்துவ வசதி அளிக்க வேண்டுமென்று உத்தரவிட்டது மட்டுமல் லாமல், இறந்தவர்களுக் கும், காயப்பட்டவர்களுக் கும், சிறு காயப்பட்டவர் களுக்கும் உடனடியாக நிதி வழங்கச் சொல்லி, சம்பந் தப்பட்ட அந்தந்த பகுதிக ளுக்கு அமைச்சர்களை அனுப்பி, அந்த காரியங் களை உடனடியாக முதல மைச்சர் அவர்கள் செய்தி ருக்கிறார்கள்.

பொதுவாக நம்முடைய மாநிலத்தில் பார்த்தோம் என்றால், மொத்தம் 1,482 பட்டாசு ஆலைகள் இருக் கின்றன. விருதுநகர் மாவட் டத்தில் மட்டும் 1,085 இருக் கிறது. மொத்தம் 1482 இருக்கிறது. பட்டாசு சில் லறை விற்பனைக் கடைகள் மொத்தம் 6,639 கடைகள் இருக்கிறது.

இது இன்றைக்கு இருக் கிற நம்முடைய நிலவரம். இதற்கு முன்பு பார்த்தோம் என்றால், சிவகாசி யில் மட்டும்தான் பட்டாசு செய்தார் கள். இப்போது தமிழ்நாட்டில் இருக்கின்ற 38 மாவட்டங்களில், எல்லா மாவட்டங்க ளிலும் பட்டாசு ஆலைகளுக்கு உரிமை வாங்கியி ருக்கிறார்கள்.



பட்டாசு ஆலையில் வேலை செய்வதற்கு அங்கே நடந்த 2 சம்பவங்களையும் பார்த்தால், விருதுநகர் மாவட்டத்தில் நடக்க வில்லை. கிருஷ்ணகிரி யிலும், அரியலூரிலும் நடந் திருக்கிறது. அங்கேயெல் லாம், இதில் அனுபவமுள்ள ஆட்கள் இல்லை. இப் போது, அரியலூரில் இறந்த வர்களின் கணக்கைப் பார்த் தால், விருதுநகர் மாவட்டத்திலிருந்து 6, 7 பேர் வந்து அங்கே வேலை செய்திருக்கிறார்கள்.

இவர்களை அழைத்துப் போய் அங்கே *training* கொடுத்து, அந்த வேலை யைச் செய்கிறார்கள். பட் டாசு என்பது தீப்பெட்டி யைப்போல அடுக்கி வைத் துவிட்டு போவது அல்ல. கொஞ்ச நேரம் அந்த பட் டாசின் *chemical* காய்ந்து போய் உரசினால்கூட உட னடியாக வெடி விபத்து வரும். ஆகவே, அப்படிப் பட்ட சூழ்நிலையில்தான், இந்த 2 இடங்களிலும் நடந் தது ஒரு தவறுதலான, அங் கேயிருக்கிற பணியாளர்கள் அதை சரியான முறையில் கையாளததன் காரணமா கத்தான் அந்த சம்பவம் நடந்திருக்கிறது. பொது வாக பார்த்தோம் என்றால் இதில்7 இலட்சம் தொழிலா ளர்கள் இதை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் ஒரே நாளில் இதை *raid* செய்து, முழுவதையும் மூடிவிட முடியும்.

இரண்டு விதமான உணர்வுகள் அரசாங்கத் திற்கு இருக்கிறது. வேலை செய்கிறவர்கள் அனைவ ரும் கூலித் தொழிலாளர்கள் என்று பார்த்தோ மென்று சொன் னால்-கிருஷ்ணகி ரியும் சரி, அரியலூரும் சரி, விருதுநகர் மாவட்டமும் சரி; அங்கே பூரா வறட்சியான பகுதி. வேறு வேலை இல் லாத காரணத்தால்தான் இந்த உயிரைப் பணயம் வைத்து இந்த வேலைக்கு வருகிறார்கள். ஆகவே முடிந்த அளவிற்கு அர சாங்க அதிகாரிகள் அது போன அரசாங்கமாக இருந் தாலும் சரி, இந்த அரசாங்க மாக இருந்தாலும் சரி; நாங் கள் முடிந்த அளவிற்கு அதற்கு வேண்டிய பாது காப்பு பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். தலை மைச் செயலாளர் தலைமை யிலே அதற்கு ஒரு குழு அமைத்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

ஒவ்வொரு மாவட்டத்தி லும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமை யிலே ஒரு குழு அமைத்து மாதத்திற்கு 4 நாட்கள் இந் தத் தொழிற்சாலைகளை பார்வையிட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கி றோம். ஆகவே, இந்த தடுப் புப் பணிகளை எல்லாம் இந்த அரசாங்கம் செய்து கொண்டுதான் இருக்கிறது. தொடர்ந்து செய்யும். பொதுமக்களுடைய உயி ரைப் பணயம் வைக்கிற இந் தத் தொழிலை பாதுகாத் தாக வேண்டி இருக்கிறது. பொதுமக்களுடைய உயி ரையும் பாதுகாக்க வேண் டிய கடமையிருக்கிறது. பொதுவாக எல்லா அரசாங் கத்திலும் இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டுதான் இருக்கிறது.

சென்ற அரசாங்கத்திலும் நடந்து கொண்டுதான் இருந்தது. இந்த அரசாங்கத் திலும் நடந்து கொண்டு தான் இருக்கிறது.

எண்ணிக்கையிலே ஒரு வருடம் கூட, ஒரு வருடம் குறைய இருக்கும். இப் போது தீபாவளி சீசன் எல்லா இடங்களிலும் பார்த்தோம் என்று சொன் னால் பட்டாசு வேகமாக செய்ய வேண்டுமென்று சொல்லி, அதிகப்படியான ஆட்களை வைத்து வேலை வாங்குகிறார்கள். இந்தப் பட்டாசு வெடி விபத்து களுக்குக் காரணமே, குறிப் பிட்ட நபர்கள் மட்டும் வேலை செய்தால் வராது. இந்தத் தீபாவளி நேரத்தில் மார்க்கெட்டில் வேகமாக சேல்ஸ் செய்ய வேண்டு மென்ற எண்ணத்தோடு இவர்கள் எல்லாம் அதிகப்ப டியான ஆட்களை, டிரையி னிங் இல்லாத ஆட்களை வைத்து வேலை செய்வ தால்தான் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்திருக்கிறது.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க, முதலமைச்சர் அவர்கள் எனக்கு அறிவுறுத்தியிருக்கி றார்கள். நானும் தொழிலா ளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் இதிலே சம்பந் தப்பட்ட முக்கிய அதிகாரி களை அழைத்து வைத்துப் பேசி அந்தப் பணிகளை நிச் சயமாக எதிர்காலத்தில் இவ் வளவு பெரிய விபத்துகள் நடக்காத அளவுக்கு நிச்சய மாக செய்வோம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதிகப்படியான நிவாரணத் தொகை வழங்க வேண்டு மென்று சொன்னார்கள். போன ஆட்சிக் காலத்திலே 1 இலட்சம் ரூபாய்தான் நீங் கள் கொடுத்துக்கொண்டு இருந்தீர்கள்.

இப்போதுதான் நம் தாராள மனசுக்கு சொந்தக் காரர் நம்முடைய முதல மைச்சர் அவர்கள் 3 இலட் சம் ரூபாய் வழங்கி இருக்கிறார்கள். (மேசை யைத் தட்டும் ஒலி) இறந்த வர்களுக்கு 3 இலட்சம் ரூபாய், பெரிய காயம் அடைந்தவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய், குறை வாக காயம் அடைந்தவர்க ளுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்று சொல்லி உடனடி யாக வழங்க உத்தரவிட்டது மட்டுமல்லாமல் சம்பந்தப் பட்ட அமைச்சர்களை அங்கே அனுப்பி பார்வையி டச் சொல்லி அவர்களுக்கு வேண்டிய ஆறுதலும் சொல்லி, அந்தக் குடும்பத் தாருக்கு வேண்டிய அந்த நிதியுதவி செய்து உடனடி யாக அவர்களுக்கு வேண் டிய பிரேதப் பரிசோதனை முதற்கொண்டு உடனடி யாக உட்கார்ந்து செய்து கொடுக்கக்கூடிய முதல மைச்சராக நம்முடைய முத லமைச்சர் அவர்கள் இருக்கி றார்கள்.

நம்முடைய முதலமைச் சர் எங்களுக்கு எல்லாம் அறி வுறுத்திச் சொல்லும்போது, தொடர்ந்து இதுபோன்ற விபத்துகள் வராதவண்ணம் பார்க்க வேண்டு மென்று சொல்லி இருக்கிறார்கள். எதிர்காலத்தில் இது போன்ற விபத்துகள் இல்லாத ஒரு சூழலை தமிழ்நாட்டில் நம் முடைய ஆட்சியிலே நம்மு டைய முதல்வர் அவர்கள் ஆட்சியிலே நிச்சய மாகக் கொண்டு வருவோம்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இரா மச்சந்திரன் பதிலளித்தார்.

ஒரே நாடு – ஒரே தேர்தல் என்று பேசும் ஒன்றிய பா.ஜ.க. அரசு

# ஒரே நதிநீர் இணைப்புச் சட்டம் கொண்டு வரலாமே!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக்.12-

காவிரி நதிநீர்ப் பிரச்சி னையில் கருநாடகத்தைப் பார்த்தாவது, தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் ஒரே குர லில் பேசவேண்டும். எதற் கெடுத்தாலும் 'ஒரே ஒரே' என்று பேசும் ஒன்றிய பி. ஜே.பி. அரசு ஒரே நதிநீர் இணைப்புச் சட்டத்தைக் கொண்டு வரலாமே! அதை விட்டுவிட்டு வேடிக்கை பார்க்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசை வரும் தேர்தலில் வீட்டுக்கு அனுப்பவேண் டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர் கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கைவருமாறு:

காவிரி டெல்டாவில் தஞ்சை, நாகை, திருவாரூர் போன்ற மாவட்ட விவசா யிகளின் கண்ணீர் வற்றாத கண்ணீராகப் பெருக்கெடுத் தோடுகிறது. காரணம், பயிர்களுக்குப் போதிய காவிரி தண்ணீர் வரத்து இல்லாததே!

**உச்சநீதிமன்றத் தீர்ப்பையே மதிக்காத கர்நாடக மாநில அரசு!**

கர்நாடக மாநிலம்,



அங்கே அவர்களுக்குப் போதிய தண்ணீர் இருந் தும், தமிழ்நாட்டிற்கு உச்ச நீதிமன்றமும், காவிரி நதிநீர் ஒழுங்காற்று ஆணையமும் ஆணையிட்டபடி, 5 ஆயி ரம் கன அடித் தண்ணீ ரையோ, 3 ஆயிரம் கன அடி தண்ணீரையோ கொடுக்க திட்டவட்டமாக மறுத்து, உச்சநீதிமன்றத் தீர்ப்பையே உதாசீனம் செய்து, இரக்க மற்ற அரசியல் செய்து அடாவடித்தனத்தைத் தொடர்கிறது!

மிகவும் சிக்கலான இப்பி ரச்சினையில், அண்டை மாநிலத்துடன் எப்போதும் நல்லுறவு பேணுவதே மக் கள் நலப் பாதுகாப்புக்குரிய தாக அரசியல் அமையும் என்ற அடிப்படையில், மிக எச்சரிக்கையுடன் தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது ஒவ் வொரு அடியையும் எடுத்து வைக்கிறார்!

முதலாவதாக, அடிப்ப டையான ஓர் உண்மை யைச் சுட்டிக்காட்டி, அதன் பிறகே மற்ற உண்மைகளுக் குச் செல்லவேண்டும்.

**கர்நாடகத்தைப் பார்த்தாவது தமிழ்நாடு திருந்த வேண்டாமா?**

கருநாடகத்தில் உள்ள எந்த அரசியல் கட்சியானா லும் அமைப்புகள் ஆனா லும் ஒரே குரலில் தொடக் கத்திலிருந்தே தமிழ்நாட்டுக் குத் தண்ணீர் தரக்கூடாது என்பதில் ஒரே அணியில் நியாயத்தைப் புறந்தள்ளிக் கூட,ஒன்றுபட்டுநிற்கிறார்கள்!

தமிழ்நாட்டில் இதற்கு நேர்மாறாக அவிழ்த்துக் கொட்டிய 'நெல்லிக்காய் மூட்டை அரசியல்' என்ற அவல நிலையே!

மேகதாது அணையைக் கட்ட விடவில்லையே சட்ட நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாடு தனது உரிமை களை உச்சநீதிமன்றம் வரை சென்று நிலை நிறுத்துகிறதே என்ற ஆத்திரம் கருநாடக மாநிலத்தில் கட்சி பேத மற்ற அரசியல் அடிப்படை!

அண்டை மாநிலச் சகோ தரத்துவத்தைக்கூட அவர் கள் மறந்துவிட்டு, அரச மைப்புச் சட்டத்தையும், உச்சநீதிமன்றத்தையும்கூட அவமதிக்கிறார்கள்.

**பா.ஜ.க.வின் இரட்டை வேடம்!**

நேற்றைய (9.10.2023) தமிழ்நாடு சட்டமன்றத் தீர் மானத்தை ஆதரிக்காமல், அதிதீவிர வேஷம் கட்டி சாக்குப் போக்காக்கி வெளி நடப்புமூலம் தமிழ்நாடு பா.ஜ.க. வழக்கமான தனது இரட்டை வேடத்தைப் போட்டு, தன்னை தமிழ் நாட்டு மக்களுக்குத் தன்னை சரியாக அடையாளம் காட் டிக் கொண்டுள்ளது!

பிரதான எதிர்க்கட்சி யான அ.தி.மு.க. தீர்மா னத்தை ஆதரித்து வாக்களித் திருப்பது வரவேற்கத்தக் கது. என்றாலும், அதில் கூறப்பட்ட சில கருத்துக ளைத் தவிர்த்திருந்தால் அவர்களுக்குப் பாராட்டு கிடைத்திருக்கும்; சிறு சறுக் கலைக்கூட இந்த வேளை யில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் தவிர்த்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

பேச்சுவார்த்தைகள் என்ற நாடகம் பிரச்சி னைக்குத் தீர்வு வழங்குவ தைவிட, தமிழ்நாட்டு விவ சாயிகளை மேலும் அதிருப் திக் கடலில் தள்ளவே பயன்படும் என்பது அப்பட் டமான உண்மை! முதல மைச்சராக இருந்தவருக்குப் புரியாதா?

**பேச்சுவார்த்தை பலனளிக்குமா?**

காவிரி நதிநீர்ப் பங்கீட்டு வழக்கு உச்சநீதிமன்றத்தில் வரும்போது எதிர்க்கட்சியா கிய அ.தி.மு.க. வழக்கில் நாங்களும் இணைகிறோம் என்று அல்லவா கூறி உயர்ந் திருக்கவேண்டும்? அப்படி வாதாடுவதற்குப் பதில், பேச்சுவார்த்தை நடத்த யோசனை கூறுவது எவ்வ கையில் ஏற்கத்தக்கது?

ஜெயலலிதா அம்மை யார் ஆட்சியிலிருந்தபோது காவிரி நதிநீர் ஆணையப் பிரச்சினையில் ஏன் உச்சநீதி மன்றத்தை நாடி, வழக்கு நடத்தி கடுமையாக வாதா டினார் என்பதை 'வசதி யாக' மறந்துவிடலாமா? பேச்சுவார்த்தையை ஏன் தவிர்த்தார்? அது 'அம்மா வழியும் அல்லவே!'

இனி வருங்காலத்தில் தமிழ்நாட்டு நலன் காப்ப தில் சறுக்கல்களைத் தவிர்க் கவேண்டும்!

பா.ஜ.க. தன்னை இதன் மூலம் அடையாளம் காட் டிக்கொண்டு விட்டது!

நாட்டின் நதிகள் நாட்டு டைமையாக்கப்பட வேண்டி வாஜ்பேயி காலத் திலிருந்து கூறியதில், ஏன் இந்த 9 ஆண்டுகால மோடி அரசு எந்த முயற்சியும் எடுக் கவே இல்லை?

**'ஒரே நதி நீர்' இணைப்புச் சட்டம் கொண்டு வரலாமே!**

புதிய நாடாளுமன்ற கட் டடம், புதிய தனி விமானங் கள் கட்டுதல் போன்றவற் றிற்காக பல்லாயிரம் கோடி ரூபாய்ச் செலவு செய்வதை, இதற்குப் பயன்படுத்தியி ருக்கலாமே! அனைத்து மக் கள் நலமும் பாதுகாக்கப் பட்டிருக்குமே!

ஒரு பக்கம் வெள்ளம், மறுபக்கம் கடும் வறட்சி என்ற நிலை மாறி, அனைவ ரும் பயன்பெற்று, சுமூக மாக நதிநீர் சண்டையின்றி வாழ நிரந்தரத் தீர்வு ஏற்பட வேண்டாமா? அதைச் செய் யத் தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசு, அதுபற்றி இதுவரை எடுத்த நடவ டிக்கை என்ன?

ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே ரேஷன் கார்டு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்பதைவிட, ஒரே நதிநீர் இணைப்பு ஏற்பட்டிருந் தால், வெள்ளம், வறட்சி இரண்டு கொடுமைகளிலி ருந்தும் நம் நாட்டு மக்கள் அனைத்து மாநிலத்தவரும் காப்பாற்றப்பட்டு, மகிழ்ச்சி வாழ்வு வாழ்வார்களே!

**ஒன்றிய அரசை மாற்ற முடிவு செய்வீர்!**

இதைச் செய்யத் தவறிய ஆட்சியை மாற்றி, புதிய தோர் வரலாறு படைக்க, நாட்டு மக்கள் ஆயத்தமா கிட அரிய தருணம் நெருங் குகிறது.

மக்களே, விழிப்புடன் நடந்துகொள்வீர்!

இவ்வாறு திராவிடர் கழ கத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித் துள்ளார்.


"நீங்கள் இன்றி ஐந்தாம் ஆண்டு நெஞ்சமெல்லாம் நினைவுகளோடு"



தோற்றம் 16.01.1935

மறைவு 12.10.2018

**சா.பெ. மலைச்சாமி**, M.A., Ex.MLA.,

மேலூர் வடக்கு,

மேனாள் தலைவர், தி.மு.க. மாநில இலக்கிய அணி

நீங்கா நினைவுகளுடன்

குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்


கழக முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்க - இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் வருகை குறித்து

# நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் சிறப்புரை!

## உதயநிதி ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பளிக்கத் தீர்மானம்!

நெல்லை.அக்.12-

முதலமைச்சர் - கழக தலைவர் அவர்களின் வழி காட்டுதலின்படி கழக இளைஞரணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட் டுத்துறை அமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் 18.10.2023 அன்று நெல்லை மாவட்டம் வருகை தரவுள் ளதை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட் டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் மா.கிரகாம்பெல் தலைமை யில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சா.ஞானதிர வியம் எம்.பி.ஆ.பிரபா கரன்,மாவட்டப் பொருளா ளர் எம்.எஸ்.எஸ் ஜார்ஜ் கோசல் ஆகியோர் முன்னி லையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலா ளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று பேசியதாவது:-

நெல்லை மாவட்டத் திற்கு அமைச்சராகப் பொறுப்பேற்று முதன் முத லாக வருகை தரும் கழக இளைஞர் அணி செயலா ளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட் டுத்துறை அமைச்சர் அவர்க ளுக்கு உற்சாகமான வர வேற்பு அளிக்க வேண்டும். வருகிற 18ஆம் தேதி கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச் சியிலும், அதனை தொடர்ந்து இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட் டத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். இதில் இளைஞர்கள் வெண் சீருடையுடன் கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசி னார்.

நிகழ்வில் மாநில தொண் டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித் தன்,மாநில மீனவர் அணி துணை செயலாளர் எரிக் ஜூடு,பொதுக்குழு உறுப்பி னர்கள் எம்.கண்ணன், வி.ராமச்சந்திரன்,மா.கணே சன், அபுபக்கர்,எஸ்.பரமசி வஜயப்பன்,

ஒன்றிய செயலாளர்கள் சிவனு பாண்டியன் என்ற பரணி சேகர், முத்துக் கிருஷ் ணன், சுடலைக்கண்ணு, பி.சி.ராஜன், செல்வகருணா நிதி, வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், முருகன், ஜோசப்பெல்சி, கணேசன்,நகர செயலாளர் கள் கி.கணேசன், சுப்பிர மணியன் என்ற மணிசூரி யன்,பேரூர் செயலாளர்கள்

எம்.வானுவாமலை, முரு கையா பாண்டியன், சேது ராமலிங்கம், ஜான்கென் னடி, டி.வானுவாமலை, மணிகண்டன், மணிஷா செல்வராஜ், சுப்பையா, இசக்கிபாண்டியன்,முத்து கணேசன், மாவட்ட இளை ஞரணி அமைப்பாளர் ஜான் ரபீந்தர்,துணை அமைப்பா ளர்கள் வேல்முருகன், தில்லை ராஜா,அருள்ராஜ் டார்வின்,ஆகாஷ் தகவல் தொழில் மாவட்ட ஒருங்கி ணைப்பாளர் பிரேம்ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங் கள் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச் சர் - கழகத் தலைவர் அவர் களுடைய வழிகாட்டுதலின் படி திருநெல்வேலி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இளைஞர்களின் இதயநிதி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொற் கரங்களால் வருகின்ற 18.10. 2023 அன்று கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற் கிழி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கழக மூத்த முன்னோடிகளை சிறப்பு செய்யப்படுவது மாக மிகுந்த எழுச்சியுடன் நடைபெற உள்ளது.இதில் மாவட்டத்தில் உள்ள கழ கத்தின் மூத்த முன்னோடி களை அழைத்து வந்து நிகழ்ச்சியில் பங்கேற்பது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

அதனைத் தொடர்ந்து கழக இளைஞர் அணி செய லாளர் பங்கேற்கும் இளை ஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற உள் ளது.அதில் இளைஞரணி யினர் அதிக அளவிலும் மற் றும் இளைஞர்கள் பங் கேற்க வேண்டுமென இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

சட்டமன்ற கழக முன்னாள் உறுப்பினர்

# போளூர் அ.இராசேந்திரன் மறைவு!

## சட்டப் பேரவையில் இரங்கல்!

சென்னை, அக். 12 -

போளூர் சட்டமன்ற கழக முன்னாள் உறுப்பினர் அ.இராசேந்திரன் அவர்கள் மறைவுக்கு சட்டப் பேரவை யில் இரங்கல் தெரிவிக் கப்பட்டது.

பேரவையில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப் பாவு இது குறித்து படித்த குறிப்பு வருமாறு:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப் பினர் அ.இராசேந்திரன் அவர்கள் 09.10.2023 அன்று மறைவுற்ற செய்தி யினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ. இராசேந்திரன் 1989 -1991 மற்றும் 1996-2001 ஆகிய ஆண்டுகளில் போளூர் தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேர வைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு, செவ்வனே பணியாற் றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பி னரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத் தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்த கைக்கு மரியாதை செலுத் தும் வகையில் உறுப்பினர் கள் அனைவரும் எழுந்து இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட் டுக்கொள்கிறேன்.

(அதனை அடுத்து உறுப் பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

# வாலிபப் பெரியார் ஏ.வி.பி.ஆசைத்தம்பி நூற்றாண்டு விழா!

## (சில நினைவுக் குறிப்புகள்)

நாளை மாலை (13.10.2023) சென்னை இராஜா அண்ணாமலை மன்றத்தில் வாலிபப் பெரியார் ஏ.வி.பி. ஆசைத்தம்பியின் நூற்றாண்டு தொடக்க விழாக் கொண்டாடப்படுகிறது. அவரின் தனித்த ஆளுமைகள் திராவிட இயக்கத்திற்கு, குறிப்பாகத் தி.மு.கழகத்திற்கு எவ்வாறு பயன்பட்டது என்பதையும் அவரது பணிகளின் சிறப்பையும் இத்தருணத்தில் நினைவு கூருவது சாலச் சிறப்புக்குரியதாகும்.

நீதிக்கட்சியும், சுயமரியாதை இயக்கமும் விருதுநகர் பகுதியில் 1930-களில் மக்களின் ஈர்ப்புக்குரிய இயக்கங்களாகத் திகழ்ந்து வந்த சமயத்தில் ஆசைத்தம்பியின் தந்தையார் பழநியப்பன் அவர்களையும் இவ்விரு இயக்கங்கள் மிகவும் கவர்ந்தன. அவரும் அவற்றில் ஈடுபாடு கொண்டவரானார். அதன் தொடர்ச்சி அவர் மகனான ஆசைத்தம்பியையும் பற்றிக் கொண்டதில் வியப்பு ஒன்றுமில்லை. விருதுநகர் வணிகர்களின் கோட்டையாக மட்டுமில்லை, சிவஞான யோகிகள் முதலான அறிஞர்களின் தமிழர் கழகம் போன்ற அமைப்புகளை உருவாக்கிய இடமாகவும் அது இருந்தது. இவ்வூரில்தான் 24.09.1924 இல் ஆசைத்தம்பி பிறந்தார். பள்ளி இறுதி வகுப்பு வரை பயின்றார்.

ஆசைத்தம்பியைச் சுயமரியாதை இயக்கம் அதன் மீது அவரைப் பெரும் பற்றுக் கொள்ளச் செய்வதாய் இருந்தது. அப்பற்று எதனால் உருவாகிறது? அவருக்குள்ள சீரிய சிந்தனையும் அதனால் உருவாகிற கருத்துகளும் எண்ணங்களும்தான் அப்பற்றுக்குக் காரணமாக அமைந்தன. ஆகவே அவர் தமது எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்த பேசத் தொடங்கினார். மேடைகளை நாடினார். ஏடுகளில் எழுதத் தொடங்கினார். கட்டுரைகளாக மட்டுமல்லாமல் சிறுகதை, நாவல் இலக்கியங்களாகவும் படைக்கத் தொடங்கினார். அவர் எழுத்துகள் அனைத்தும் பகுத்தறிவைப் பேசின. சுயமரியாதை உணர்வை ஊட்டின. இப்பணிகளையெல்லாம் விருதுநகரிலிருந்தே தொடங்கிவிட்டார் ஆசைத்தம்பி.


முதன் முதலில் இவருடைய எழுத்துகள் நாரண துரைக்கண்ணனை ஆசிரியராகக் கொண்ட 'பிரசண்ட விகடன்' ஏட்டில் வெளியாயிற்று. நாரண துரைக்கண்ணன் சிறந்த எழுத்தாளர், 'ஜீவா' என்கிற புனைபெயரில் நிரம்ப எழுதியவர். இவர் தாம் ஆசிரியராக இருந்த பிரசண்ட விகடனைப் பயன்படுத்தி ஏராளமான பார்ப்பனர் அல்லாத எழுத்தாளர்களின் எழுத்துகளை வெளியிட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பிரசண்ட விகடனில் ஆசைத்தம்பியின் எழுத்துகள் தொடர்ந்து வெளிவந்த போதும் அவருக்கு 'இன்னும் சொல்ல வேண்டும், எழுத வேண்டும்' என்கிற ஆசைப் பொங்கி வழிந்தது. அதனால் அவர் 'தனி அரசு' இதழை விருதுநகரிலேயே தொடங்கி விட்டார்.



அறிஞர் அண்ணா தமது 'திராவிட நாடு' இதழை 08.03.1942, இல் தொடங்கினார். இந்த இதழின் தலைப்பே அக்காலத்தில் நமது இயக்கத்தின் கொள்கையைப் பேசியது. அதே போல ஏ.வி.பி. ஆசைத்தம்பியின் 'தனிஅரசு' நாம் தாபிக்க போகும் விடுதலையான அரசை எதிரொலித்தது. குடிஅரசு, விடுதலை, ரிவோல்ட், புரட்சி எனும் வரிசையில் 'தனிஅரசு' பெயரிலேயே இலட்சியத்தைப் பேச வைத்த ஆசைத்தம்பியின் இளமையின் இலட்சியத் துடிப்பை என்னவென்று சொல்வது? ஆசைத்தம்பி நடத்திய ஏட்டின் பெயரே திராவிட இயக்கம் அந்நாள்களில் வலியுறுத்திய தனிநாட்டுக் கோரிக்கையை எடுத்துக்காட்டியது.

ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் திருமணம் திராவிடர் கழகம் தோன்றுவதற்கு முன்னரே 28.05.1944 இல் பெரியாரின் தலைமையில் நிகழ்ந்தது, அவர் பரமேசுவரி அம்மையாரை மணந்தார். அப்போது ஆசைத்தம்பிக்கு வயது 20. இவர் 1948 முதல் 1956 வரை விருதுநகர் மாநகராட்சியின் உறுப்பினராகப் பணியாற்றி இருக்கிறார். தி.மு.கழகம் தொடங்கப்பட்டதற்கான அறிவிப்பினை அறிஞர் அண்ணா முறையாக வெளியிட்ட நாளான 17.09.1949 ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் ஏ.வி.பி. ஆசைத்தம்பி கலந்து கொள்ள வில்லை. ஆனால் மறுநாள் 18.09.1949 இல் ராபின்சன் பூங்காவில் நடைபெற்ற தி.மு.க. தொடக்கநாள் பொதுக்கூட்டத்தில் ஏ.வி.பி. ஆசைத்தம்பி கலந்து கொண்டார். அந்தக் கூட்ட மேடை 26 சொற்பொழிவாளர்கள் அமரும் வண்ணம் அமைக்கப்பட்டு இருந்தது. இருப்பினும் கூட்ட மேடையில் கூட்டத்தின் தலைவர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி உட்பட 37 பேர் அமர்ந்திருந்தனர். அதில் ஒருவர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி. மழையின் காரணமாக இவர்கள் அனைவரும் அந்தத் தொடக்க நாள் கூட்டத்தில் பேச முடியவில்லை. பத்து பேர் மட்டுமே பேச முடிந்தது. அந்தப் பத்துபேரில் ஏ.வி.பி.ஆசைத்தம்பி ஒருவர். இறுதியில் அறிஞர் அண்ணா பேசுகிறபோது பெருமழைப் பொழிந்தது. மக்கள் நனைந்து கொண்டே அண்ணாவின் பேச்சைக் கேட்டனர்.

**தி.மு.க.வின் தொடக்க நாள் பொதுக்கூட்டத்தில் பேச வாய்ப்புக் கிடைத்த ஏ.வி.பி.ஆசைத்தம்பிக்கு காஞ்சியில் நடைபெற்ற தி.மு.க. மாவட்ட மாநாட்டின் திறப்பாள ராக பொறுப்பேற்கவும் கழகத்தால் பணிக்கப்பட்டார். 1950 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் மூன்றாம் வாரத்தில் காஞ்சியில் தி.மு.கழகத்தின் அந்நாளைய ஒன்றுபட்ட செங்கற்பட்டு மாவட்ட முதல் மாநாடு நடைபெற்றது. தி.மு.கழகம் தொடங்கப்பட்டு சுமார் 15 திங்கள் ஆன நிலையில் அம்மாநாடு நடந்தது. அம்மாநாட்டினைத் தொடங்கி வைத்து உரையாற்றுகிற போது பேச்சுக்கிடையில் ஒரு கருத்தை எடுத்து வைத்தார் ஆசைத்தம்பி.**



1924–2023

அக்கருத்து வருமாறு ;-

"காங்கிரஸ் கட்சி ஒழிந்துவிடுமோ என்ற பீதியில்தான், நமது கழகத்தை ஒழித்துக் கட்ட காங்கிரஸ் முயல்கிறது, காமராசரும் அவரது கையாள்களும் எந்த இடத்திற்குச் சென்றாலும் முகாரி பாடுகிறார்கள். திராவிட இயக்கத்திற்கு தைரியம் இருந்தால், தேர்தலில் நிற்கட்டும் என்று காமராசர் சவால் விடுகிறார். நான் அவருக்கு கூறுகிறேன்; தேர்தலில் நிற்கத் தயார்.

ஆனால் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன், காமராசர் பெரிதென கருதுகிற சட்டசபையை, திராவிட இயக்கம் கைப்பற்றிவிட்டால், மறுதினமே, மத்திய சர்க்காரால், சட்டசபை கலைக்கப்படும்"

நாம் தனிநாட்டுப் பிரிவினையை வலியுறுத்திய நாள்களில் இப்படித் தொடர்ந்து மேடைகளில் பேசி வந்தவர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி, தொடர்ந்து இன்னொரு கருத்தையும் சொல்வார். 'எத்தனை முறை சட்டமன்றத்தை கலைத்தாலும் திரும்ப மக்கள் எங்களையே தேர்ந்தெடுத்தால் உங்களால் என்ன செய்ய முடியும்?' என்று கேட்பார். ஆனால் அப்படி ஒரு நிலைமை ஏற்படவில்லை. ஆனால் ஆசைத்தம்பியின் இவ்வரசியல் கணிப்பு, பொய்த்துப் போகவில்லை, வேறொரு காலகட்டத்தில் அந்த நிகழ்வு நடந்தது, தி.மு.கழக ஆட்சி இரண்டு முறை கலைக்கப்பட்டது. தி.மு.கழக ஆட்சிக் கலைக்கப்படுவதற்கு முன்பாகவே அவர், கோவையில் நடைபெற்ற தி.மு.க. 5ஆவது மாநில மாநாட்டில் 'தேர்தல் நடத்துகிற அதிகாரம் அந்தந்த மாநிலத்திற்கு இருக்க வேண்டும்' என்கிற கருத்துப்பட பேசினார். எதைச் சொன்னாலும் அழுத்தம் திருத்தமாக ஆணி அறைந்தாற்போல் சொல்வார்.

அவர் நல்ல நடுத்தர உயரம், வழக்கமாக வேட்டி, ஸ்லாக் அரைக்கை வெள்ளைச் சட்டை அணிவார். வகிடு எடுக்காத பின்னுக்கு சீவிய பழைய அமெரிக்கன் கிராப்பு, மீசையில்லாத மழுங்க மழித்த முகம். கருப்பு மேனி; அரசியல் கருத்தூறும் அறிவுக்கேணி. உரையாடலிலும் சிந்தனை மலிந்த தாக்கம். சிரித்தால் பளிச்சென தெரியும் பற்கள் இவர்தான் ஏ.வி.பி.ஆசைத்தம்பி.

ஆசைத்தம்பியின் மேடைபேச்சு, மிக மிக எளிமையானது. ஒலிபெருக்கியின் முன் நின்று பேச்சை மிக அமைதியாகத் தொடங்குவார். வேகமாக வந்து வார்த்தைகள் தெறித்து விழாது. சொல்ல வருகிற கருத்துக் குழப்பம் இல்லாமலும் தெளிவாகவும் இருக்கும். செவிகளிலும் மனத்திலும் ஒன்றாக கேட்டுப் பதியும் வண்ணம் அவை இருக்கும். அவர் பேச்சின் உரை வளம் பேசுகிற பிரச்சினைக்கு தடுத்தாற்போல் இருக்கும். அவர் குரலில் செய்கிற ஏற்ற இறக்கங்கள், பெரியாரை நினைவூட்டும். ஒரு சிக்கலை விளக்கி அவரது கருத்தைச் சொல்ல வருகிற போது "ஆகையினாலே, தோழர்களே!" என அவர் விளித்துப் பேசுகிற போது, பெரியாரின் நினைப்பை அவரது பேச்சு ஏற்படுத்திவிடும். இவரது பேச்சு கழகத்தோழர்களிடையேயும் ஆதரவாளர்கள் இடையேயும் பொது மக்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பைப் பெற்றது. அவரது பேச்சுப் பெரியாரை நினைவு ஊட்டுவது போல் அமைந்திருந்ததால் ஆசைத்தம்பியை 'வாலிபப் பெரியார்' என்று இயக்கத் தோழர்கள் சிறப்பித்துக் கூறுவர்.

'தனிஅரசு' மாதமிருமுறை ஏடாகத்தான் முதன் முதலில் வெளிவந்தது, இவ்வேடு குறுகிய காலமே வெளிவந்து நின்று போயிற்று. ஆனால் அவர் குறு நாவல்களையும் புத்தகங்களையும் நிரம்ப எழுதினார். 1948-1951க்குள் அவர் எழுதியவை அனைத்தும் விற்பனைக்கு கிடைத்தன. இப்புத்தகங்களை அந்நாள்களில் பாரி நிலையம் வெளியிட்டு வந்தது. ஆசைத்தம்பி நூல்கள் விற்பனையான காலத்தில் மாயாவி, சிரஞ்சீவி, மேதாவி, எல்லார்வி போன்ற எழுத்தாளர்களின் மர்ம நாவல்களையும் மக்கள் வாங்கிப் படித்தனர். இவர்களுக்கு முந்தைய காலகட்டத்தில் நாவல் எழுத்தாளர்களான ஆரணி குப்புசாமி முதலியார், எஸ்.எஸ்.அருணகிரி நாதர், வடுவூர் துரைசாமி அய்யங்கார், வை.மு.கோதைநாயகி முதலானோர் எழுதிய நூல்களை மக்கள் படித்தனர். ஆசைத்தம்பியின் நூல்களும் அந்த இடத்தைப் பிடித்தன. இவரைப் போலவே நமது திராவிட இயக்க எழுத்தாளர்கள் பல சிறு பெரு நூல்களை எழுதி வெளியிட்டனர். அவை கலை, இலக்கிய உலகில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. அதே நேரத்தில் இவை நாடகமேடை, திரைப்படத் துறைக்கு வழியை உண்டாக்கின.

ஆசைத்தம்பி நாற்பது நூல்கள் எழுதியுள்ளார். அவை சிறுகதை தொகுப்புகளாகவும் குறுநாவல்களாக வும், நாவல்களாகவும் வெளிவந்தன. அவர் எழுதிய நூல்களின் பெயர் விவரமாவது; வெயிலும் நிழலும். என் மாமி, கொலைகாரி, பயங்கர வாழ்வு, அன்பழகன் ஆட்சி, விந்திய வீரன், டாக்டர், இரவில் வந்தவன், வறண்ட வாழ்க்கை, ஆண்களை நம்பலாமா?, கேட்கவில்லை, தியாகச்சுடர், நினைவுச் சூழல், வெறுங்கூடு, பிணங்கள், கிழக்கும் மேற்கும், காதலும் கண்ணீரும், காதல் மாளிகை, அரசகுமாரி, கசப்பும் இனிப்பும், முள், மனைவி, சிலந்திக்கூடு, கசந்த கரும்பு.

**ஆசைத்தம்பியின் உரைநடை இயல்பானது. அவை படிக்க வேண்டும் என்ற உணர்வை எடுத்த எடுப்பிலேயே உண்டாக்கும். எடுத்துக்காட்டிற்கு சொல்லவேண்டுமானால் ஆசைத்தம்பி 'சிற்பி' எனும் சிறுகதையை இப்படித் தொடங்குகிறார்.**

"எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அழகு அற்புதமான கற்பனைக்கும் எட்டாதது. அதில் ஒரு கவர்ச்சி இருக்கிறது. குருடனைத்தவிர, அழகைக் கண்டு சொக்காதவனே இருக்க முடியாது. ஆதிமக்கள் அழகை ஆண்




**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க எழுத்தாளர்


டவனாகக் கூட வர்ணித்தார்கள். அழகையும் அசிங்கத்தையும் ஏன் அகிலத்தில் உள்ள அனைத்தையும் மறந்து, மனத்தை மோன நிலையில் நிறுத்திய தவசிகள் கூட அழகின் வலையில் விழுந்தார்கள். ஆனால் அவனுக்கு மட்டும் விதிவிலக்கா? அதிலும், அவன் ஒரு சிற்பி! அழகுக்கும் சிற்பிக்கும் இருக்கும் அழியாத நெருங்கிய, தொடர்பைப் போல எதற்குமே கிடையாது"

இதுதான் ஆசைத்தம்பியின் உரைநடை - இவர் 'பயங்கர வாழ்வு' என்னும் சிறுகதை தொகுப்பின் முன்னுரையில் இயற்கை வாதக் கருத்தை வெளிப்படையாக வைத்து எழுதுகிறார். அந்த முன்னுரை இதுதான்;

"வாழ்வை நம்பாதே என்று வறட்டுக் கூச்சல் போடுகிற வஞ்சகர்கள்கூட வாழத்தான் ஆசைப்படுகின்றனர். வாழவும் செய்கின்றனர். ஆனால், வாழ்க்கை வாழ்வதற்கே என்று நம்புகிறவர்கள் ஏனோ நாசமாகப்



போகிறார்கள். வாழவைக்க வேண்டிய வாழ்க்கை, எல்லோரையும் வாழவிடுவதில்லை. இதிலே யார் குற்றவாளி? வாழ்வா, வாழ்ந்தவர்களா? இருவரும் நிரபராதிகள்! பின் குற்றவாளி? கோணல் மாணலான இச்சமுதாயம் இதில் வாழ்க்கை வளமுள்ளதல்ல; பயங்கரமானது" என மனித வாழ்க்கையின் சிக்கல்களை அந்த முன்னுரையில் மிக இயல்பாக எடுத்துக்காட்டினார் ஆசைத்தம்பி.

ஆசைத்தம்பியின் நெடுங்கதைகளில் நாவல்களில் 'முள்', 'பிணங்கள்', போன்றவை உற்சாகத்தையும் திகிலையும் படிப்போர்க்கு உண்டாக்கக் கூடியனவாக இருந்தன. இப்புத்தகங்கள் மட்டுமன்றி இவர் அரசியல், சமுதாயம், வரலாறு பற்றிய நூல்களையும் எழுதினார். அவை திராவிடர்கள், காந்தியார் சாந்தியடைய, காமராஜர், திராவிட இயக்கம் ஏன்?, நாம் இருவர், அறை கூவல், சென்னையில், அழகு எரிந்தது, மக்கள் சக்தி, வழக்கு தீர்ப்பு நடமாடும் கல்லூரி, எகிப்திய எழுச்சி, சிகாகோ சம்பவம், தனியரசு ஏன்? ஆகிய நூல்களாகும். இந்நூல்களெல்லாம் இயக்கத் தோழர்களிடையே பெரியதொரு உணர்ச்சியைத் தோற்றுவித்தது. இந்நூல்களையெல்லாம் இப்போதுள்ள நூல்களின் விலைகளோடு ஒப்பிடமுடியாது. திராவிட இயக்கத் தோழர்கள் எழுதிய நூல்கள் ஒரு ரூபாய் விலையிலிருந்து இரண்டரை ரூபாய் விலையில்தான் அந்நாள்களில் விற்பனையாயின. அந்நாள்களில் நடந்த பொதுக்கூட்டங்களிலும் மாநாடுகளிலும் நூல்கள் விற்பனை என்பது மிக முக்கியமாக இருந்தது. அதற்கென்று ஒரு கூட்டமே மொய்த்துக் கொண்டு இருக்கும்.



ஆசைத்தம்பி எழுதிய நூல்களின் வரிசையில் 'காந்தியார் சாந்தியடைய' என்னும் அந்நூலில் அனைவரையும் கவர்ந்த பகுதி இதுதான்;

**"'பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பாம்பைக் கொல்லாதே' என்று ஒரு பழமொழி இன்னும் இங்கு புதுமொழியாக இருக்கிறது. கருப்புச் சட்டைக்காரன் தானே, ஈரோட்டில் பயிற்சி பெற்றவன் பேசுவான் ஐயா என்றுதான் பலர் கூறுவார்கள், ஆனால் அப்படிக் கூறியவன் கருப்புச்சட்டைக்காரன் அல்லர்; வெள்ளைக்காரர்; பெவர்லி நிக்லோஸ் என்பவர். குமரி முதல் காஷ்மீர் வரை எல்லா இடங்களையும் மக்களையும் பார்வையிட்டு நிலைதெரிந்து ஆராய்ந்து அதன் பின்னரே, இந்தியாவைப் பற்றி (Verdict of India) ஒரு புத்தகம் எழுதினார். அதிலே குறிப்பிட்டு இருக்கிறார் பாம்பைக் கொல்லாதே என்று!"**

காங்கிரஸ் அரசு ஆசைத்தம்பியோடு இணைத்து; அவரது நூலை வெளியிட்ட தோழர்களையும் 'அழியட்டுமே திராவிடம்' எனும் நூலை வெளியிட்ட தங்கேவல், கலியபெருமாள் ஆகியோரையும் தண்டித்தது. இதுபற்றிய செய்திகளைத் திராவிட நாடு இதழ் (30.07.1950) வெளியிட்டுள்ளது. அதற்குக் 'காந்தியார் சாந்தியடைய' எனத் தலைப்பிடப்பட்டு இருக்கிறது. அந்தச் செய்தி வருமாறு:

"ஆறு மாதம் கடுங்காவல், அபராதம் ரூபாய் ஐந்தாயிரம்!

மூன்று மாதம் கடுங்காவல், அபராதம் ரூபாய் ஐந்தாயிரம்!

அபராதத்தைக் கட்டத் தவறினால், மேலும் மூன்று மாதம் சிறைவாசம்!

'காந்தியார் சாந்தியடைய' என்னும் நூலைத் தீட்டிய விருதுநகர் தோழர் ஏ.வி.பி.ஆசைத்தம்பிக்கும், மேற்படி நூலையும், 'அழியட்டுமே திராவிடம்' என்னும் நூலையும் வெளியிட்ட துறையூர் தோழர்கள் தங்கவேல், கலியபெருமாள் ஆகியோருக்கும் முசிறி சப்மாஜிஸ்டிரேட் அளித்த தீர்ப்பு இது! இத்தீர்ப்பை எதிர்த்து திருச்சி செஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் கொடுக்க, கழகத்தின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தீர்ப்பின் விவரம் தந்தி மூலம் சென்னையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்திற்குக் மற்ற தோழர்களுடன் கலந்து, அமைப்புக்குழுச் செயலாளர் தோழர் என்.வி.நடராசனை, அப்பீல் செய்வது சம்பந்தமாகவும் தண்டனை அடைந்த தோழர்களை ஜாமீனில் விடுதலை செய்விக்கவுமான காரியங்களைக் கவனித்து வருமாறும் திருச்சிக்கு அனுப்பி வைத்தார்.

ஜாமீனில் விடுதலையானதும் மேற்கொண்டு வழக்கை நடத்துவது சம்பந்தமாக விருதுநகர் கிளை தி.மு.கழகத்தினரைக் கலந்து பேசி, ஆவன செய்து வருமாறு பொதுச்செயலாளர் அமைப்புக்குழுச் செய லாளருக்கு அனுமதியளித்தார். அதையொட்டி, உடனடி யாகத் தோழர் என்.வி.என். 20 ஆம் தேதியன்று (20.07.1950) திருச்சி சென்றார். திருச்சி தி.மு.க. தோழர்களான அன்பில் தருமலிங்கம், சாம்பு, வானமாமலை, துறையூர் அழகுமுத்து ஆகியோர் ஜாமீன் விடுதலைக்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதை அறிந்து தோழர் என்.வி.என். உடனிருந்து ஒத்துழைத்தார். 21ஆம் தேதி மாலை, தண்டனையடைந்த தோழர்களை ஜாமீனில் விடுமாறு திருச்சி செஷன்ஸ் நீதிபதி உத்தரவு பிறப்பித்ததோடு ஆகஸ்டு 4ஆம் தேதியன்று, அப்பீல் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படுமென்றும் அறிவித்தார்.

பின்னர் திருச்சி மத்திய சிறைக்குச் சென்று, தோழர்கள் ஆசைத்தம்பி, தங்கவேல், கலியபெருமாள் ஆகியோரைத் திருச்சி, துறையூர் கழக நண்பர்களும், தோழர் என்.வி.என்.னும் சந்தித்து, பொதுச்செயலாளர் தந்த செய்திகளைக் கூறினர். அன்று இரவே, தோழர் நடராசன், விருதுநகர் புறப்பட்டுச் சென்று மறுநாள் விருதை திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களைச் சந்தித்து விபரம் கூறியதன் பேரில், அன்று மாலை 4 மணிக்கு, கிளைக் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம், தோழர் என்.வி.என். தலைமையில் நடைபெற்றது. அப்போது பொதுச் செயலாளர் அறிவிப்பையும், இது போன்ற வழக்குகள் குறித்து, தலைமைச் செயற்குழு செய்திருக்கும் தீர்மானத்தையும் எடுத்துக்காட்டி, கிளைக் கழகத்தினர் வழக்குக் குறித்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தொடர்ச்சி நாளை

# ஆவூர் அல்லது வந்தவாசியில் "பாய் நெசவுப் பூங்கா!"

## சட்டப் பேரவையில் - கு.பிச்சாண்டி வலியுறுத்தல்!

**சென்னை, அக். 12- சட்டப் பேரவையில், நேற்று முன்தினம் (10.10.2023) கேள்வி நேரத்தின்போது பேசிய - சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை மாவட்டத்தில் வந்தவாசி அல்லது ஆவூரில் "பாய் நெசவுப் பூங்கா" அமைக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.**

இது தொடர்பாக பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-



**கு.பிச்சாண்டி:** சிறுபான்மையின மக்கள் பல்வேறு ஊர்களில் பாய் நெசவுத் தொழிலை செய்து வருகிறார்கள். என்னுடைய கீழ் பெண்ணாத்தூர் தொகுதியிலுள்ள ஆவூர் என்ற கிராமத்திலே பாய் நெசவாளர்கள் இருக்கிறார்கள். சீர்காழியில் இருக்கின்ற பாய் நெசவாளர்களுக்கெல்லாம் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனால், எங்களுடைய ஆவூர் பகுதி மற்றும் வந்தவாசி பகுதியிலே இருக்கின்ற பாய் நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதில்லை. ஆகவே, சிறுபான்மையின மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்குகின்ற வகையிலேயும்,— தமிழ்நாட்டில் எங்கேயுமே பாய் நெசவுப் பூங்கா இல்லாமல் இருக்கிறது. ஆகவே, எங்களுடைய மாவட்டத்தில், ஆவூர் அல்லது வந்தவாசியில் கண்டிப்பாக ஒரு பாய் நெசவுப் பூங்கா அமைக்க வேண்டும்.

மின்சாரத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, முதல்வர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, மின்சாரம் சம்பந்தமான பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில், - மின்சாரம் - பாய் நெசவுத் தொழிலினுடைய பொருள்கள் எல்லாம் நம்முடைய அரசு நிறுவனங்களுக்கெல்லாம் முறையாக supply செய்யப்படுகின்றன. கதர் வாரியத்தின்மூலம், போக்குவரத்துக் கழகங்கள், சிறைத் துறைகள் மற்றும் எல்லாத் துறைகளுக்கெல்லாம் கொடுக்கப்படுகிறது. அதில் எந்தவிதமான தவறும் நடைபெறவில்லை. வந்தவாசியில் சிறுபான்மையின மக்கள் நிறையபேர் வசிக்கிறார்கள். சிறுபான்மையின மக்களுடைய கோரிக்கைகள் சம்பந்தமாக பேரவைத் துணைத் தலைவர் கோரிக்கை வைத்திருக்கிறார். நிச்சயமாக இந்த அரசு அதைப் பரிசீலிக்கும். அதற்கு இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அவரை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்கூடம் ஒன்றை கட்டித் தந்து, அதற்குரிய பாய் உற்பத்தி செய்கின்ற சங்கம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

### அனைத்து மாவட்டங்களிலும்

# 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டப்பட நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் - சமூக நலன், மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதாஜீவன் தகவல்!

**சென்னை, அக்.12- சட்டப் பேரவையில், நேற்று முன்தினம் (10.10.2023) கேள்வி நேரத்தின்போது பதிலளித்த சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதாஜீவன், 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டுவது குறித்து விளக்கமளித்தார்.**

சட்டப்பேரவையில் இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:-



**கு.மரகதம் தங்கவேல்:** மதுராந்தகம் தொகுதியில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கீதாஜீவன்:** 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகம் தொகுதியின் மக்கள் தொகை 2,75,953 ஆகும். அதில் 1,37,903 நபர்கள் பெண்கள் ஆவர். இத்தொகுதியில் 95 தொழிற்சாலைகளில் 678 பெண் ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் சோழிங்கநல்லூர்ஒக்கியம் துரைப்பாக்கம் என்ற இடத்தில் 50 படுக்கை வசதிகள் கொண்ட அரசு பணிபுரியும் மகளிர் விடுதி ஒன்று செயல்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல், கூடுவாஞ்சேரியில் புதிய 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதியானது 120 படுக்கை வசதிகளுடன் தமிழ்நாடு மகளிர் விடுதி கழகத்தின்மூலம் கட்டப்பட்டு, 13.7.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

தாம்பரத்தில் 420 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் பணிபுரியும் மகளிர் விடுதி தற்போது பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. இவை தவிர, செங்கல்பட்டு மாவட்டத்தில் மொத்தம் 15 பதிவு பெற்ற தனியார் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

மதுராந்தகம் தொகுதியிலுள்ள பெண் பணியாளர்கள் மேற்குறிப்பிட்ட விடுதிகளில் தற்போது பயன்பெற்று வருகின்றனர். தேவையைப் பொறுத்து, எதிர்காலத்தில் 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதி அமைத்திட இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**கு.மரகதம் தங்கவேல்:** மதுராந்தகம் நகர் பகுதியில் 'தோழி' மகளிர் தங்கும் விடுதி தொடங்கப்பட்டால், அங்கிருந்து அவர்கள் பணித் தலங்களுக்குச் செல்ல உதவியாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுராந்தகம் நகரத்தில் தங்கும் விடுதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**அமைச்சர் பி.கீதாஜீவன்:** பெண்களின் அதிக பணிப் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பணிபுரியும் மகளிர் விடுதி அமைத்திட வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கொள்கையாக முடிவெடுக்கப்பட்டு, அதை இந்தத் துறைக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, ஏற்கெனவே, அடையாறு, விழுப்புரம், வேலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் விடுதிகள் புதியதாக நவீனப்படுத்தப்பட்டு, சீரமைக்கப்பட்டு, சகல வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'தோழி' நிறுவனத்தின் மூலம் - புதிய பணிபுரியும் மகளிர் விடுதிகள் திருச்சிராப்பள்ளி மற்றும் கூடுவாஞ்சேரி பகுதிகளில் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், தாம்பரம், திருவண்ணாமலை, ஓசூர், கிருஷ்ணகிரி, St. Thomas Mount ஆகிய பகுதிகளிலும் புதியதாக பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, இதுமட்டுமல்லாமல், பணிபுரியும் மகளிர் விடுதிகள் இல்லாத எல்லா மாவட்டங்களிலும் அமைத்திட வேண்டுமென்று, அதற்கு இடம் தேர்வு செய்து அளித்திட வேண்டுமென்று மாவட்ட நிருவாகத்திடம் நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம். ஆகவே, உறுப்பினரின் அவர்களுடைய கோரிக்கையையும் தேவையைப் பொறுத்து இந்த அரசு பரிசீலிக்கும்.

**கு.மரகதம் குமரவேல்:** கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்கள் மற்றும் குழந்தை திருமணத்திலிருந்து மீட்கப்பட்ட சிறுமிகள், குடும்பத்தினரால் புறக்கணிக்கப்பட்ட பெண்கள் தங்குவதற்கான சேவை இல்லம் மதுராந்தகம் தொகுதியில் அமைக்கப்படுமா?

**அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன்:** நலிவடைந்த பெண்கள், கைம்பெண்கள், அதைப்போல தாய், தகப்பன் இல்லாத ஆதரவற்ற பெண்களெல்லாம் தங்குவதற்கு தாம்பரத்தில் சேவை இல்லம் செயல்பட்டு வருகிறது. அங்கே தங்கக்கூடிய பிள்ளைகளுக்கு நாம் கல்வி அளிக்கிறோம், தொழிற்பயிற்சி அளிக்கிறோம். ஆகவே, அவர்களுக்கு பாதுகாப்பும் அளிக்கப்பட்டு, அவர்கள் எதிர்காலத்தில் ஒரு வேலையைத் தேடக்கூடிய அளவிற்கு, அவர்களுக்கு, அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்துகிற அந்தத் தேர்வுக்கான பயிற்சியும் இந்தத் துறையால் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, அப்படி மதுராந்தகம் தொகுதியிலுள்ள பெண்களையெல்லாம் நீங்கள் அதில் தங்க வைத்து பயனடையலாம். ஏனென்றால், அங்கு அதிகமான பேர் தங்கும் அளவிற்கு இடவசதி உள்ளது. 100 பேர் நன்றாக தங்கலாம் என்றால், இப்போது அங்கே 25 பேர், 33 பேர் தான் இருக்கின்றனர். ஆகவே, அந்த இல்லத்தை மதுராந்தகம் தொகுதியிலுள்ள பெண்களும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

### புவனகிரி - வேதபுரீஸ்வரர் கோயிலுக்கு குடமுழுக்கு! கழக அரசு ஏற்பட்ட 28 மாதங்களில்

# திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு - 600 கோடி ரூபாய்க்கு மேல் உபயதாரர்கள் நன்கொடை!

## சட்டப்பேரவையில் - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதம்!

**சென்னை, அக்.12– சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், கேள்வி நேரத்தின் போது பதிலளித்த இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, "63 ஆண்டுகளுக்குப் பிறகு கழக அரசின் புவனகிரி வேதபுரீஸ்வரர் கோயில் குடமுழுக்கு திருப்பணிக் காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது'' என்றும் 'கழக அரசு அமைந்த கடந்த 28 மாதங்களில், கழக அரசு மீது கொண்ட நம்பிக்கையினால் தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில் களின் திருப்பணிகளுக்கு 600 கோடி ரூபாய்க்கு மேலாக உபயதாரர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்' என்றும் பெரு மிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:

**ஆ.அருண்மொழித் தேவன்:** புவனகிரியில் உள்ள அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** புவனகிரியில் அமைந்திருக்கின்ற வேதபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வல்லுநர் குழுவின் பரிந்துரை பெற்றிருக்கின்றது. கூடிய விரைவில் அந்தத் திருக்கோயிலுக்கு திருப்பணி ஆரம்பிக்கப்படும்.

**ஆ.அருண்மொழித் தேவன்:** புவனகிரி வட்டம், கீழ்வளையமாதேவி ஊராட்சியில் உள்ள வான் கோடீஸ்வரர் கோயிலும் மிகவும் பழமையான, தொன்மையான திருக்கோயிலாகும். எனவே, புகழ்பெற்ற வான் கோடீஸ்வரர் திருக்கோயிலையும் புனரமைத்து, குடமுழுக்கு செய்ய அரசு முன் வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் முதலில் கோரிய வேதபுரீஸ்வரர் கோயில் என்பது, 1960 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்ற கோயிலாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆகம விதிப்படி, 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற வேண்டிய குட முழுக்குகள் அனைத்தையும் நடத்த வேண்டுமென்ற உத்தரவிற்கிணங்க, கிட்டத்தட்ட 63 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் திருக்கோயில் இப்போதுதான் திருப்பணிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் கோரிய மற்றொரு திருக்கோயிலான வளையமாதேவி திருக்கோயிலும் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. 31 இலட்சம் ரூபாய் செலவில், இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் பொது நல நிதியிலிருந்து அந்தத் திருப்பணிக்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. வெகு விரைவில், அந்தத் திருப்பணி மேற்கொள்ளப்படும்.

**ஆ.அருண்மொழித்தேவன்:** எனது புவனகிரி தொகுதியிலுள்ள வடதலைக்குளம் என்ற கிராமத்தில் அருள்பாலித்து வருகின்ற அய்யனார் திருக்கோயில் முற்றிலும் சிதிலமடைந்து சேதமாகியுள்ள நிலையில், அரசினுடைய நிதியை எதிர்பார்க்காமல், வடதலைக்குளம் கிராம மக்களே ஒன்று சேர்ந்து அதைப் புதுப்பிக்க, தங்களுடைய சொந்த செலவிலே திருப்பணியைச் செய்துகொள்ள தயாராக உள்ளனர். எனவே, அந்த அய்யனார் திருக்கோயிலைப் புனரமைக்க, உரிய அனுமதியை அரசு உடனடியாக வழங்குமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் மூன்று திருக்கோயில்களைப் பற்றி இங்கே கூறினார்கள். அதில் ஒன்று, வேதபுரீஸ்வரர் திருக்கோயில், இன்னொன்று அய்யனார் திருக்கோயில், மற்றொன்று வளையமாதேவி திருக்கோயில் ஆகும். இந்த 3 திருக்கோயில்களும் இந்த ஆண்டு இறுதி டிசம்பர் மாதத்திற்குள் திருப்பணிக்காக எடுத்துக்கொள்ளப்படும் என்ற நற்செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலே இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், நன்கொடையாளர்கள், உபயதாரர்கள் அதிகளவில் திருக்கோயில் திருப்பணி செய்ய வருகை தருகிறார்கள். இதுவரையில், இந்த ஆட்சி ஏற்பட்ட 28 மாதங்களில், 600 கோடி ரூபாய்க்கு மேலாக திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ள உபயதாரர்கள் வருகிறார்கள் என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) உபயதாரர்கள் தருகின்ற நிதி முறையாக திருக்கோயிலுக்கு செலவிடப்படுகிறது என்ற நம்பிக்கையால்தான் இவ்வளவு பெரிய தொகை உபயதாரர்களிடமிருந்து நிதியாகப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயில்கள் புனரமைக்கப்படுகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, உறுப்பினர் கோரிய 3 திருக்கோயில்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் திருப்பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

### முதல்வரின் அறிவுரையேற்று

# அனைத்துப் பள்ளிகளிலும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த அரசு விரைவான நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் - பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவிப்பு!

**சென்னை, அக்.12– சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது வினாக்களுக்குப் பதிலளித்த பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி, 'முதல்வர் அவர்களின் அறிவுரையேற்று, தமிழ் நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளின் வகுப்பறைகள் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்புகளையும் மேம்படுத்த, உடனே அவற்றை நிறைவேற்றித் தர, கழக அரசு விரிவான விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது' என புள்ளி விவரங்களுடன் குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில், நேற்று கேள்வி நேரத்தின் போது இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**டாக்டர் தி.சதன் திருமலைக்குமார்:** வாசுதேவநல்லூர் தொகுதி, கடையநல்லூர் வட்டம், புளியங்குடியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வக அறைகள் கட்ட அரசு முன்வருமா? ஆம் எனில் எப்போது?

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** வாசுதேவநல்லூர் தொகுதி, நடையநல்லூர் வட்டம் புளியங்குடியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 452 மாணவ/மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 21 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இப்பள்ளியில் 15 வகுப்பறைகள் மற்றும் ஆய்வகம் உள்ளது. இப்பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான வகுப்பறைகள் மற்றும் ஆய்வக வசதி உள்ளது.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** அந்தப் பள்ளியின் சிதிலமடைந்த அந்தக் கட்டடத்தை சரி செய்து, Flooring, மேற்கூரை, windows, doors எல்லாம் போட்டுத் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, அது மிகவும் பழமை வாய்ந்த ஒரு பள்ளிக்கூடம்தான். ஏற்கெனவே NABARD திட்டத்தின் மூலமாக 2010 ஆம் ஆண்டு அதற்கென்று 10 வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆய்வகங்கள் என்று வருகின்றபோது இயற்பியல், வேதியியலுக்கு என்று ஓர் ஆய்வகம். உயிரியலுக்கு ஓர் ஆய்வகம். அதே போன்று உயர்நிலை பிரிவிற்கென்று தனியாக ஓர் அறிவியல் ஆய்வகம் என்று ஏற்கெனவே அது செயல்பாட்டில் இருந்து கொண்டிருக்கின்றது.

அடுத்து, உட்கட்டமைப்பு என்று வருகின்றபோது கழிவறைகளாக இருந்தாலும் சரி, அது மாணவர்களுக்கு தேவையான எண்ணிக்கையில் அதுவும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. இருந்தாலும், இன்றைக்கு நீங்கள் சொல்லியிருக்கின்றபடியால், அங்கேயிருக்கின்ற எங்களுடைய CEO's மூலமாக அதற்கான கருத்துகள் பெறப்பட்டு, உள்ளபடியே அதுபோன்று இருந்தது என்று சொன்னால், அதற்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு, அதனை உடனடியாகக் கட்டித் தருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நம்முடைய அரசாங்கம் செய்துதரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** பதிலுக்கு மிக்க நன்றி. அங்கே தனியார் பள்ளிகள் புற்றீசல்போல் முளைத்துக் கொண்டேயிருக்கின்றன. அரசு பள்ளிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு அந்த infrastructure இன்னும் அதிகரிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்வதோடு, அதை செய்து தர வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததிலிருந்து, குறிப்பாக கல்வியும், மருத்துவமும் தனது இரு கண்கள் என்று இன்றைக்கு உழைத்துக் கொண்டிருப்பவர் நம் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இன்றைக்கு அவருடைய வழிகாட்டுதலின்படி, அரசு பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல, அது பெருமையின் அடையாளம் என்பதை எல்லாவிதத்திலும் அதை நிறைவேற்ற வேண்டுமென்கின்ற வகையிலேதான் இன்றைக்கு நாங்களும் உழைத்துக் கொண்டிருக்கின்றோம். Infrastructure என்று வரும்போது ஏற்கெனவே 418 பள்ளிகளுக்கு தேவையான 2,394 கூடுதல் வகுப்பறைகள், 51 ஆய்வகங்கள், 10 மாணவ, மாணவிகள் தங்குகின்ற hostel வசதி இவைகளுக்கெல்லாம் இன்றைக்கு தனியாக 813 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான நிதிகளெல்லாம் இன்றைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. . . . .

அதை நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் நாங்கள் பேசியிருக்கிறோம். மிக விரைவில் அதை நாங்கள் தொடங்கி வைப்போம்.

உங்களுக்கே தெரியும். கடந்த மாதம் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் RD Department மூலமாக Elementary schoolsக்கு என்று தனியாக ஒரு 1000 வகுப்பறைகள் கட்டி அதைத் திறந்து வைத்துவிட்டோம். இப்போது இந்த மாதத்தில் அடுத்த 1000 கட்டிடங்கள் தயாரான நிலையில் இருக்கின்றது. அதையும் நாங்கள் திறந்து வைக்க இருக்கின்றோம். இந்த Elementary மட்டுமல்ல உயர்நிலை, மேல்நிலை பள்ளி என்று வரும்போது, NABARDஐ சார்ந்து இருக்கின்ற அந்த நிதிகள் வரும்போது நமக்கான அந்த 85, 15 சதவிகிதம் அந்த மாநில ஒன்றிய அரசுக்கான பங்கீட்டில் அதற்கான பணிகளும் மிக விரைவில் தொடங்கவிருக்கும். உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்று வரும்போது, மிகவிரைவாக அதற்கான கட்டடங்களும் கட்டி முடிக்கப்படும். அதற்கு உங்களுடைய பள்ளியும் அதற்கான வகுப்பறை தேவை ஏற்படும்போது கட்டித்தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**செ. ராஜேஷ் குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் முஞ்சிறை அரசு மேல்நிலைப் பள்ளியும், கொல்லம்கோடு நகராட்சியில் கொல்லம்கோடு அரசு மேல்நிலைப் பள்ளியும் இந்த இரண்டு பள்ளிகளில் அதிகமாக மாணவ, மாணவியர்கள் படித்து தேர்ச்சி பெற்று வருகின்றனர். ஆனால், அந்த இரண்டு பள்ளிகளிலும் கட்டடங்கள் மிகவும் சிதலம் அடைந்திருக்கிறது. அந்தக் கட்டடங்களைப் போர்கால அடிப்படையில் அதை செய்துதர வேண்டும்.

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** நான் ஏற்கெனவே சொன்ன மாதிரிதான். 418 பள்ளிக்கூடம் இல்லாமல் மேலும் 173 பள்ளிக்கூடங்களுக்கு கிட்டத்தட்ட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கு இன்றைக்கு 215 கோடி ரூபாய்க்கு உட்கட்டமைப்பு வசதிக்கு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது இல்லாமல், கூடுதலாக இன்றும் ஒரு 252 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் கணக்கீடுகள் செய்யப்பட்டு, அதற்கென்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது இல்லை. அந்ததந்த பகுதியைச் சார்ந்து இருக்கின்ற CEOs மூலமாக localஇல் இருக்கின்ற அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற அந்த detailsஐயும் நாங்கள் பெற்றுக்கொண்டு, இதுஇல்லாமல் பத்திரிக்கைச் செய்தி மூலமாக வருகின்றதற்கும் நாங்கள் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டுமென்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அதற்கும் இன்றைக்குத் தனியாக நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மிக விரைவாக இந்த fund எல்லாம் வரவர அதற்கான வேலைகள் உடனடியாக நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் எடுத்துச்சொல்லி, ஏனென்றால் two weeks முன்னால் அவர்கள் department சார்ந்து ஒரு கூட்டமே போட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு target fix செய்திருக்கிறார்கள். இத்தனை மாதத்திற்குள் இத்தனை கட்டடங்கள், இத்தனை வகுப்பறைகள் கட்டி முடிக்கப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும், அதை நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு இன்னும் விரைவாக அந்தப் பணிகளை முடிக்கின்ற பணியில் நாங்களும் எங்களை ஈடுபடுத்திக்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செ. ஸ்டாலின் குமார்:** என்னுடைய துறையூர் தொகுதி, துறையூர் நகரத்தில் 1971ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பள்ளியானது பழமையான கட்டிடத்தில் 1600 மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக்கு 25 புதிய வகுப்பறைகளும், ஆய்வக கட்டிடமும் பெண்களுக்கு கல்வி வழங்கிட திட்டமும், பெண்களுக்கு சொத்துரிமை வழங்க சட்டமும் தந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் இப்பள்ளி தோற்றுவிக்கப்பட்டது. இப்பள்ளியானது ஏற்கெனவே முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெயரில் இயங்கிவந்த பள்ளியானது, தற்போது அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கலைஞர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இந்தத் தருவாயில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெயரில் இப்பள்ளியை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி என்று பெயர் மாற்றம் செய்தும், புதிய கட்டிடமும் வழங்க அமைச்சர் முன்வருவாரா?

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** ஏற்கெனவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இது சார்ந்து என்னிடம் பலமுறை அதற்கான கோரிக்கையை வைத்திருக்கிறார். நாங்களும் துறையூர் பகுதிக்கு செல்லும்போதெல்லாம் அதனை பார்வையிட்டிருக்கின்றோம். கண்டிப்பாக இன்றைக்கு இருக்கின்ற அந்த சட்டதிட்ட விதிகளின்படி, ஏனென்றால், அன்றைக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெயர் இருந்தபொழுது, அவர் உயிருடன் இருந்தபோது வைத்த பெயர். இப்போது அதற்கான சட்டதிட்டங்களும் மாற்றப்பட்டிருக்கிறது என்பதால் அதை எடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், துறை சார்ந்து அதற்கான சாத்தியக்கூறு என்ன என்பது அறிந்து கொள்ளவேண்டும். அதே போன்று, கட்டிடங்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் சொன்ன பதில்தான் எல்லாவற்றுக்கும் அது பொருந்தும். ஆக அதற்கான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படும்பொழுது, ஏற்கெனவே சட்டமன்றத்தில் இருக்கின்ற பல்வேறு இயக்கத்தைச் சார்ந்திருக்கிறவர்கள் இந்த இந்த கட்டடங்களை புதுப்பித்துத்தரவேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம். அதுமட்டுமல்லாமல் ஒரு 166 கோடி M&R (Maintenance and Repair)க்கு என்று தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒவ்வொரு CEOsக்கும் இதை நாங்கள் அனுப்பி இருக்கிறோம். எதெல்லாம் உடனடியாக செய்யவேண்டுமோ அதற்கான பணிகள் நம்முடைய CEOs மூலமாக அந்த நிதிகள் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். வருங்காலத்தில் நீங்கள் கேட்கின்ற ஒவ்வொரு அந்த பள்ளிக்கூடங்கள் கட்டிடங்களாக இருந்தாலும், புதிய வகுப்பறைகள், ஆய்வகமாக இருந்தாலும், கழிவறைகளாக இருந்தாலும் உடனடியாக கட்டுவதற்கான அனைத்து ஏற்பாடுகளை நாங்கள் செய்வோம்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

# நடிகர் நாசர் தந்தை பாஷா மறைவு!

## தொலைபேசி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆறுதல்!

சென்னை, அக். 12 –

மூத்த நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவருமான நாசரின் தந்தை பாஷா வயது மூப்பின் காரணமாக நேற்று முன்தினம் மறைவெய்தினார்.

இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

மூத்த நடிகரும் தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவருமான நாசர் அவர்களின் தந்தை பாஷா அவர்கள் வயது மூப்பு காரணமாக மறைவெய்தினார் என்றறிந்து வருந்துகிறேன். தந்தையின் மறைவால் வாடும் நாசர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முதல்வர் அவர்கள் நாசர் அவர்களை தொலைப் பேசி வாயிலாக தொடர்பு கொண்டு அவரது தந்தை மறைவிற்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து ஆறுதல் கூறினார்.



தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தொழில்துறை சார்பில் சென்னை லீலா பேலஸில் நேற்று முன்தினம் (10.10.2023) நடைபெற்ற தொழில் நிறுவனங்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் (INDUSTRY ENGAGEMENT MEET) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் 2023 அக்டோபர் மாதம் சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க செல்லும் மாற்றுத்திறனாளி வாள்வீச்சு வீராங்கனை செல்வி.ஷெராந்தி தாமஸ் அவர்களுக்கு ரூபாய் 8இலட்சம் நிதியுதவியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா , அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட மழையம்பட்டு ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, மாவட்டப் பொருளாளர் விழுப்புரம் இரா.ஜனகராஜ், வருவாய் கோட்டாட்சியர் பிரவீனா குமாரி, மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், ஒன்றியச் செயலாளர்கள் பி.வி.ஆர்.விசுவநாதன், தே.முருகவேல், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன், துணைத் தலைவர்கள் கோமதி நிர்மல்ராஜ், ஜோதி உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



கழக மாநில விவசாய அணி துணைச் செயலாளர் எம்.அரியப்பன் – திருமதி சாந்தி அரியப்பன் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி கிருஷ்ணகிரியில் நடைபெற்றது. மணமக்களை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மேயர் எஸ்.ஏ.சத்யா, எல்.பி.தர்மலிங்கம், கள்ளிப்பட்டி மணி, ஆதிகேசவன், புருஷோத்தமன், சுப்பிரமணி, பனைமரத்துப்பட்டி ஆர்.ராஜேந்திரன், எம்.எல்.ஏ., தடங்கம் சுப்பிரமணி, முனைவர் பி.பழனியப்பன், டி.செங்குட்டுவன், இ.ஜி.சுகவனம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னணியினர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

### குறு - சிறு - நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் மின் கட்டண உயர்வு நடைமுறைப்படுத்தப்படுவது

# ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்படும் வரை தற்காலிகமாக ஒத்தி வைப்பு : நெட்ஒர்க் கட்டணம் 50 சதவீதம் குறைப்பு!

## சட்டமன்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் விளக்கம்!

சென்னை, அக்.12-

குறு - சிறு - நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் மின் கட்டண உயர்வு நடைமுறை படுத்தப்படுவது ஸ்மார்ட் மீட்டர் பெருத்தப்படும் வரை தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், மின் உற்பத்தி நெட்ஒர்க் கட்டணம் 50 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது என்றும் சட்டமன்றத்தில் நேற்று முன்தினம் கவன ஈர்ப்பு தீர்மானத்தின் போது குறு சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் விளக்கம் அளித்துள்ளார்.



சட்டப்பேரவையில் நேற்று, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மின் கட்டண மாற்றம் குறித்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்குப் பதிலளித்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆற்றிய உரை வருமாறு:

மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில் மின் வாரியத்தில் ஏற்படும் செலவிற்கேற்ப, தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் அதனை உயர்த்துவது வழக்கமாக உள்ளது. உதாரணமாக 20-11-2016 ஆ.தி.மு.க ஆட்சி காலத்தில் மின் கட்டணம் 2012ஆம் ஆண்டில் 37 சதவீதமும் 2014ஆம் ஆண்டில், 16.33 சதவீதமும் உயர்த்தப்பட்டது. மாண்புமிகு முன்னாள் முதல்வர் அம்மையார் ஜெயலலிதா ஆட்சி காலத்தில் மட்டும் 53 சதவீதம் மின் கட்டணம் கூடுதலாக உயர்த்தப்பட்டது. கடந்த ஆட்சியின் மோசமான நிர்வாகத்தால், மின் வாரியம் பெரும் நஷ்மடைந்து, பெரும் கடன் சுமைக்கு உள்ளானது. இது மட்டுமின்றி, குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் தொடர்ந்து மின் கட்டணத்தை உயர்த்தாவிட்டால் தமிழ்நாட்டிற்கு நிதியுதவியோ, மத்திய நிறுவனங்களிடமிருந்து கடன் உதவியோ தரப்படாது என ஒன்றிய அரசு கடும் விதிமுறைகளை விதித்தது. இந்த சூழ்நிலையில், வேறு வழியில்லாத காரணத்தால் 2022-23 முதல் 2026-27 வரையிலான 5 ஆண்டு காலத்திற்கு Multi Year டாரிப் மின் கட்டண மனுவை,கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (TNERC) முன்பு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO), சமர்ப்பித்தது.

இதனால் ஏற்பட்ட மின் கட்டண மாற்றம் குறித்து, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் அமைப்புகள் தெரிவித்த கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்களது நலனைப் பாதுகாக்கும் வகையில் கட்டணத்தை மாற்றி அமைத்திட முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். இதன்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ஆண்டு ஒன்றிக்கு ரூ.2,000 கோடி வருவாய் குறைந்தாலும், தொழில்முனைவோரின் நலனைக் கருத்தில் கொண்டு, தொழிற்சாலைகளுக்கு நிர்ணயிக்கப்பட இருந்த நிலைக்கட்டணம் (Fixed Charges) மாதம் ஒன்றுக்கு 50 கிலோவாட் வரை ரூ.100 லிருந்து ரூ.75 எனவும், 50 கிலோவாட்டுக்கு மேல் 100 கிலோவாட் வரை ரூ.325 லிருந்து ரூ.150 எனவும், 100 கிலோவாட் முதல் 112 கிலோவாட் வரை ரூ.600 லிருந்து ரூ.150 எனவும், 112 கிலோவாட்டுக்கு மேல் ரூ.600 லிருந்து ரூ.550 எனவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தின் (TNERC) ஒப்புதல் பெற்று மாற்றியமைக்கப்பட்டது. இதன் பின்னர், தொழில் மேம்பாட்டிற்கான மேலும் ஒரு நடவடிக்கையாக, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவு நுகர்வோர்களின் கோரிக்கைகளை ஏற்று, தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கான (LT IIIB) உச்சநேர (Peak Hour) நுகர்விற்கான மின்கட்டணத்தை 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக குறைத்து ஆணையிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த குறைக்கப்பட்ட கட்டணங்களுக்காக ஆண்டிற்கு ரூ.145 கோடியை தமிழ்நாடு அரசு TANGEDCO விற்கு கூடுதல் மானியமாக வழங்குகிறது. இதன் மூலம் சுமார் 3 லட்சத்து 37 ஆயிரம் MSME நிறுவனங்கள் பயன் பெற்று வருகின்றன. தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தின் Multi Year டாரிப் ஆணையின்படி, 2023 ஜூலை மாதத்தைப் பொறுத்த வரையில், 2022 ஏப்ரல் மற்றும் 2023 ஏப்ரல் ஆகியவற்றின் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்களின் படி கணக்கிட்டால், 4.7 சதவீதம் மின்கட்டணம் உயர்த்தப்பட வேண்டும். இந்த நடைமுறையை ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவை செயல்படுத்தும் போது பொது மக்களும், தொழில்துறையினரும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

இதனை கருத்தில் கொண்டு, கட்டண உயர்வு விகிதம் மறு ஆய்வு செய்யப்பட்டு, சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கட்டணம் உயர்த்தப்பட்ட நிலையில், 2022 ஏப்ரல் மாதத்தின் விலைக் குறியீட்டு எண்ணிற்கு பதிலாக 2022 ஆகஸ்ட் மாதத்தின் விலை குறியீட்டு எண் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, கட்டண உயர்வு 4.7 சதவிகிதத்திலிருந்து 2.18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே பெறப்பட்ட இக்கோரிக்கைகள் தொடர்பாக 18.04.2023, 21.07.2023 மற்றும் 26.09.2023 ஆகிய நாட்களில் அமைச்சர் பெருமக்கள் முன்னிலையில் தொழில் நிறுவன சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டு அக் கருத்துக்கள் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கீழ்க்கண்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. பருவ கால தேவைக்கு ஏற்ப, மாறும் தன்மையுள்ள மின் பளுவை கொண்ட தாழ்வழுத்த தொழிற்சாலைகள் தங்களது நிலைக் கட்டணத்தை (Fixed Charges) குறைத்துக் கொள்ளும் வகையில் அனுமதிக்கப்பட்ட மின்பளுவினை குறைத்துக் கொள்ளவும், தேவைப்படும் போது உயர்த்திக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இச்சலுகையை ஆண்டு ஒன்றுக்கு நான்கு முறை பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்காக எவ்வித கூடுதல் கட்டணமும் செலுத்த தேவையில்லை. 12 கிலோ வாட்டுக்கு குறைவாக உள்ள குறு நிறுவனங்களுக்கான மின் கட்டணம் IIIB வீதப்படியில் இருந்து IIIA1 வீதப்படிக்கு மாற்ற ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், குறு மற்றும் சிறு தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணத்தை பிற தென்னிந்திய மாநிலங்களோடு ஒப்பிடும் போது ஒரு யூனிட் மின் கட்டணம் ஆந்திரா மாநிலத்தில் 8 ரூபாய் 47 பைசா வாகவும், கர்நாடகா மாநிலத்தில் 7 ரூபாய் 81 பைசா வாகவும், உள்ள நிலையில் தமிழ்நாட்டை பொறுத்தமட்டில் 7 ரூபாய் 50 பைசா வாக உள்ளது. அதே போன்று நிலைக் கட்டணத்தை ஒப்பிடும் போது ஒரு கிலோவாட்டிற்கு ஆந்திரா மாநிலத்தில் ரூ.292 ஆகவும், கர்நாடகா மாநிலத்தில் ரூ.275 ஆகவும், கேரள மாநிலத்தில் ரூ.220 ஆகவும் உள்ள நிலையில் தமிழ்நாட்டில் ரூ.150 ஆக உள்ளது. பிற மாநிலங்களில் மின் வரி (E.Tax) 10 முதல் 15 சதவீதம் வரை வசூலிக்கப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் 5 சதவீதம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. மேலும், கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் எரிபொருள் விலையை ஈடு செய்யும் முறையில் ஒவ்வொரு கால் ஆண்டிற்கும் மின் கட்டணம் உயர்த்தப்படுகிறது. எனவே பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் நமது மாநிலத்தில் மின்கட்டணம் மற்றும் நிலைக்கட்டணம் மிகவும் குறைவாகவே உள்ளது. இவ்வாறு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்ட நிலையில்,குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன சங்கங்கள் இதர கோரிக்கைகளை தொடர்ந்து வலியுறுத்தியதைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் அந்த கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து, மேலும் கூடுதல் சலுகைகளாக தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கான LT IIIB உச்ச நேர நுகர்விற்கான மின்கட்டணத்தை ஸ்மார்ட் மீட்டர் (Smart Meter) பொருத்தப்படும் வரை நடைமுறைப்படுத்துவதை தற்காலிகமாக ஒத்தி வைத்தும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சோலார் மேற்கூரை மின் உற்பத்தி நெட்வொர்க் கட்டணத்தினை 50% குறைத்தும் ஆணையிட்டுள்ளார்கள். இதனால் ஆண்டுக்கு ரூ.50 கோடி அரசுக்கு செலவாகும். இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து MSME நிறுவனங்களின் நலனிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும், முதல்வர் அவர்கள் தனி கவனம் செலுத்தி, பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைக்கான நிதி ஒதுக்கீட்டினை 2021-22 ஆம் நிதி ஆண்டில் ரூ.741.96 கோடியாகவும், 202223ஆம் நிதி ஆண்டில் ரூ.1025.10 கோடியாகவும், 202324ஆம் நிதி ஆண்டில் ரூ.1502.11 கோடியாகவும், ஒவ்வொரு ஆண்டும் உயர்த்தி வழங்கி வருகிறார். MSME நிறுவனங்களின் நலனைப் பாதுகாப்பதில் இந்த அரசு முனைப்புடன் செயல்படுகிறது. எனவே, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகள் யாருடைய தூண்டுதலுக்கும் இடம் கொடுக்காமல், தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, தொழிலாளர்களின் நலனை எண்ணி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் விளக்கமளித்தார்.

### முதல்வர் கோரிக்கை ஏற்று - ஒன்றிய அரசு - கொப்பரைத் தேங்காய்

# கொள்முதலுக்கான காலத்தை நீட்டித்து - கொள்முதல் அளவையும் உயர்த்தியுள்ளது!

## இந்நல்வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள -

## வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

**சென்னை, அக்.12–**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை ஏற்று ஒன்றிய அரசு கொப்பரைத் தேங்காய் கொள்முதலுக்கான காலத்தை நீட்டித்து கொள்முதல் அளவை உயர்த்தியுள்ளது. விவசாயிகள் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேளாண்மை – உழவர்நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விவசாயிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் 4.58 இலட்சம் எக்டர் பரப்பில் தென்னை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு சுமார் 3.34 இலட்சம் மெட்ரிக் டன் கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது.

கொப்பரையின் சந்தை விலை குறைந்தபட்ச ஆதரவு விலையை விடக் குறையும்போது தென்னை விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாட்டில் ஒன்றிய அரசின் விலை ஆதரவுத்திட்டம் (Price Support Scheme) செயல்படுத்தப்படுகிறது. இதன்படி அரவைக் கொப்பரை கிலோ ரூ.108.60 என்ற வீதத்திலும், பந்துக் கொப்பரை கிலோ ரூ.117.50 என்ற வீதத்திலும் தேசிய வேளாண்மை கூட்டுறவு இணையத்திற்காக (NAFED) குறைந்தபட்ச ஆதரவு விலையில் (Minimum Support Price) ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் (Regulated Markets) மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டில் 01.04.2023 முதல் 30.09.2023 வரையிலான காலகட்டத்தில் 37,638 விவசாயிகளிடமிருந்து ரூ.597.225 கோடி மதிப்பிலான 54,993 மெ. டன் அரவைக் கொப்பரை கொள்முதல்செய்யப்பட்டுள்ளது.

வெளிச்சந்தையில் கொப்பரை விலை தொடர்ந்து சரிந்து வருவதால், விவசாயிகளிடமிருந்து கொப்பரை கொள்முதலுக்கான கால அளவினை நீட்டிக்க வேண்டி தொடர் கோரிக்கை வரப்பெற்றதைத் தொடர்ந்து, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, கொப்பரை கொள்முதலுக்கான இலக்கு 56,000 மெட்ரிக் டன்னிலிருந்து 90,000 மெட்ரிக் டன்னாக (அதாவது கூடுதலாக 34,000 மெ.டன்) உயர்த்தப்பட்டதுடன் கொள்முதல் செய்யும் கால அளவும் 26.11.2023 வரை ஒன்றிய அரசால் நீட்டிக்கப்பட்டுள்ளது. இது குறித்த அரசாணையும் 06.10.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஆகையால் தமிழ்நாட்டில் உள்ள தென்னை அதிகம் சாகுபடி செய்யப்படும் 24 மாவட்டங்களில் உள்ள 75 ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் விவசாயிகள் தங்களது கொப்பரைத் தேங்காயை விற்பனை செய்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மாநில விவசாய அணி துணைச் செயலாளர்

# டி.எம்.அரியப்பன் - திருமதி சாந்தி அரியப்பன் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி!

## அமைச்சர் சு.முத்துசாமி - ஏ.கே.எஸ். விஜயன் - நிர்வாகிகள் வாழ்த்து!

கிருஷ்ணகிரி, அக்.12-

கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் ஒன்றியம் ராயக்கோட்டை ஊராட்சி போடப்பட்டி கிராமம் கழக மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டி.எம் அரியப்பன் - திருமதி சாந்தி அரியப்பன் ஆகியோரின் புதல்வர் அ.அன்பானந்தம் கிருஷ்ணகிரி மாவட்டம் பூவத்தி ஊராட்சி கருதட்டனூர் கிராமம் ஜி.வெங்கடசாமி திருமதி ஜானகி ஆகியோரின் புதல்வி வே. சொர்ணப்பிரியா ஆகியோரின் மணவிழாவை 20-9-2023 அன்று கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இல்லத்தில் நடத்தி வைத்தார்.

8.10.23 அன்று கிருஷ்ணகிரி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஶ்ரீ தேவராஜ் மஹாலில் மணமக்கள் அ.அன்பானந்தம் - வே.சொர்ணபிரியா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழ்நாட்டு வீட்டு வசதி துறை அமைச்சர் சு. முத்துசாமி, டெல்லி சிறப்பு பிரதிநிதி கழக மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன், பர்கூர் சட்டப்பேரவை உறுப்பினர் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர்கே மதியழகன், ஒசூர் மாநகர செயலாளரும் மேயருமான எஸ்.ஏ.சத்யா ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கழக மாநில விவசாய அணி இணை செயலாளரும் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும் எல்பி தர்மலிங்கம், கள்ளிப்பட்டி மணி, கழக விவசாய அணி துணைச் செயலாளர்கள் ஆதிகேசவன், புருஷோத்தமன், சுப்பிரமணி, சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினரும் பணமரத்துப்பட்டி ராஜேந்திரன், தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் சுப்பிரமணி, தர்மபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் பி. பழனியப்பன், மாநில அமைப்பு சாரா ஒட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி.சுகவனம், கழகத் தீர்மான குழு உறுப்பினர் எம்.பி., வெற்றி செல்வன், மகளிர் ஆணைய உறுப்பினர் மருத்துவர் மாலதி நாராயணசாமி, மாநில இளைஞரணி துணை செயலாளர் பி. எஸ்.சீனிவாசன், பாட்டாளி மக்கள் கட்சி கௌரவ தலைவரும் பென்னாகரம் சட்டப்பேரவை உறுப்பினருமான ஜி.கே. மணி, மேகநாதன், தளி சட்டப்பேரவை உறுப்பினர் சிபிஐ மாவட்ட கழக செயலாளர் டி.ராமச்சந்திரன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பி.முருகன், வி.சி.கோவிந்தசாமி, ஆர். கே.நரசிம்மன், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டாக்டர் விஜய், கிருஷ்ணகிரி நகர செயலாளர் எஸ்.கே. நவாப், கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர் பரிதா நவாப், பரிதா நவாப் மாவட்ட கழக துணை செயலாளரும் நகரமன்ற துணைத் தலைவர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லோரா மணி, கிரீஸ் செந்தில், கிருபாகரன், மாவட்ட கழக துணை செயலாளர் புஷ்பா சர்வேஷ், பொருளாளர் சுகுமாரன், பொதுக்குழு உறுப்பினர் ஜெயராமன், தனலட்சுமி, அப்துல், முனிராஜ்,


பேரூர் கழக செயலாளர்கள் டி.ஆர்.எஸ்.சீனிவாசன், தஸ்தகீர், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி சந்திரன் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் ஷேக் ரஷீத், பூசன் குமார், தொழிலதிபர்கள் கே.வி.எஸ்.சீனிவாசன், பி.டி.அன்பரசன், ஒன்றிய கழக செயலாளர்கள் ரகுநாத், பாக்யராஜ், கருணாகரன், தளி சேர்மன் சீனிவாசன், தனசேகர், கோவிந்தன், அறிஞர் சாந்தமூர்த்தி, மகேந்திரன், தேங்காய் சுப்ரமணி, குண வசந்தரசு, சேர்மன் குமரேசன், ரஜினி செல்வம், எக்கூர் செல்வம், வி. ஜி.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.நாகராஜன், சித்ரா சந்திரசேகரன், அஸ்லாம், மாவட்டஇளைஞர் அணி அமைப்பாளர்கள் சுமன், தினேஷ், பேரூர் கழக செயலாளர்கள் வெங்கடப்பன், பாபு சிவகுமார், தொழிலதிபர்கள் டி.உதயகுமார் ஆர். எம்.எம்.முனிரத்தினம், பேரூராட்சி தலைவர்கள் பர்கூர் சந்தோஷ், அம்சவேணி செந்தில்குமார்,

ஒசூர் மாநகர அவைக் தலைவர் செந்தில், பொறியாளர் அணி ஞானசேகரன் மற்றும் தோழமைக் கட்சியை சேர்ந்த தோழர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக கிளைக் கழக நிர்வாகிகள், நண்பர்கள், உறவினர்கள், கழக நிர்வாகிகள் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

நிகழ்ச்சியின் இறுதியில் அறிவானந்தம், அன்புமதி அறிவானந்தம் ஆகியோர் அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

## தமிழ்நாடு சட்டப்பேரவையில் திருக்குறள்



சென்னை, அக். 12 -

தமிழ்நாடு சட்டப் பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் நேற்று முன்தினம் (10.10.2023) படித்த திருக்குறளும் - அதற்கான 'கலைஞர் உரை'யும் வருமாறு:-

**"ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்**

**கருதி இடத்தாற் செயின்"**

**கலைஞர் உரை :** உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால் உலகமே கூடக் கைக்குள் வந்துவிடும்.



# 39 இடம் பொருள் கலைஞர்

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் சமச்சீர் கல்வித் திட்டம்!







## சமச்சீர் கல்வித் திட்டம்!

### தடைகள் தாண்டிய தரமான அறிவியக்கம்!

‘அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி!’ இப்படி ஓர் உன்னதமான முயற்சியை எந்தக் கட்சியும் நினைத்துக்கூட பார்த்திராத போது, திராவிட முன்னேற்றக் கழகம் மிகத் துணிச்சலாக அந்த இலக்கை 2006-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், தனது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியாக அளித்தது.

நர்சரி, மெட்ரிகுலேசன், ஆங்கிலோ-இந்தியன், ஓரியண்டல், மாநில வாரியக் கல்வி ஆகிய பல்வேறு கல்வி முறைகளை ஆய்வு செய்து அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான சமச்சீர்க் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதுதான் ‘சமச்சீர் கல்வித் திட்ட’த்தின் முக்கிய நோக்கம்.

எல்லாவற்றிலும் சமத்துவம், அனைவருக்கும் சம உரிமை என்று பேசப்படும் இந்தக் காலகட்டத்தில் கல்வியிலும் சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பது தி.மு.க.வின் நிலை மட்டுமல்ல, தமிழ்நாட்டுக் கல்வியாளர்கள் பலரின் கருத்தும் அதுதான். அதனை எடுத்த எடுப்பிலேயே தான்தோன்றித்தனமாக அறிவித்துவிடவில்லை என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்தத் திட்டம் கடந்து வந்த சோதனைகளும், தாண்டி வந்த தடைகளும் ஏராளம்.

### பலகட்ட பரிசீலனைகள், பரிந்துரைகள்

2006-ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தவுடனேயே சமச்சீர் கல்வித் திட்டத்தைத் தனது முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சட்டம் இயற்றி அறிவித்துவிடவில்லை நமது கழகம். இந்தத் திட்டம் பற்றி அரசுக்குப் பரிந்துரைகளைத் தருவதற்காக 2006-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் தேதி பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் எஸ்.முத்துக்குமரன் தலைமையில் கல்வியாளர்களைக் கொண்ட ஒரு குழுவினை அரசு அமைத்தது. அந்தக் குழு இதைப் பற்றி நன்கு ஆய்வு செய்து தனது அறிக்கையை அரசின் பரிசீலனைக்கு 2007-ஆம் ஆண்டு ஜூலை 4-ஆம் தேதி அளித்தது.

அந்தப் பரிசீலனைகளை அரசு அப்படியே ஏற்றுக் கொண்டுவிடவில்லை. அந்தக் குழுவின் பரிந்துரைகளை மீண்டும் ஆய்வுசெய்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்க ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி எம்.பி.விஜயகுமார் அவர்களை ஒரு நபர் குழுவாக அரசு நியமித்தது. அதன்படி, அவரும் தனது ஆலோசனைகளை வழங்கினார்.

> **அம்மையாரின் சர்வாதிகாரப் போக்குக் காரணமாக, 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் மாணவர்கள் முதல் மூன்று மாதங்களைக் குழப்பத்திலேயே கழித்தார்கள்.**

அதன் பிறகு, தமிழ்நாட்டில் சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆய்ந்து பரிசீலிக்க, பிற மாநிலங்களில் நடைமுறையில் இருக்கும் பாடத்திட்டங்கள், தேர்வு முறைகள் ஆகியவற்றைக் குறித்து ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க அதிகாரிகளையும் கல்வியாளர்களையும் கொண்ட குழு ஒன்று அரசால் 2008-ஆம் ஆண்டு அக்டோபர் 30-ஆம் தேதி அமைக்கப்பட்டது. அந்தக் குழு கர்நாடகா, குஜராத், கேரளா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து அறிக்கையை அளித்தது.

இவ்வாறு பலகட்ட பரிசீலனைகளை மேற்கொண்டு, சுமார் நான்கு ஆண்டுகள் கழித்து, 2010-ஆம் ஆண்டில் சமச்சீர் கல்வித் திட்டத்தை, தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக அதற்கான சட்டத்தை 2010-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதி சட்டப் பேரவையில் கழக அரசு இயற்றியது.

### இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்துதல்

சட்டம் இயற்றப்பட்ட பிறகும், அன்றைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தலைமையில் 2010-ஆம் ஆண்டு மார்ச் 1-ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் கல்வியாளர்களின் அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, சமச்சீர் கல்வித் திட்டத்தை 2010-2011 கல்வி ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டன.

அதன்படி, சமச்சீர் கல்வி முறையை இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தலாம் என்றும், முதற்கட்டமாக 2010-2011 ஆம் கல்வி ஆண்டில் ஒன்றாம் வகுப்பு மற்றும் 6 ஆம் வகுப்புக்கும், பிறகு 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் இதர வகுப்புகளுக்கும் நடைமுறைப்படுத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து, 2010-2011 ஆம் கல்வி ஆண்டில் முதல் மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கு பாடத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டு, பாடப் புத்தகங்கள் தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு பாடநூல் கழகத்தால் அச்சிடப்பட்டு, மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

அதுபோலவே, அரசின் கொள்கை முடிவின்படி, 2011-2012 ஆம் கல்வி ஆண்டு முதல் சமச்சீர் கல்வி முறையை எஞ்சிய 2, 3, 4, 5, 6, 7, 8, 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்கள் 200 கோடி ரூபாய் செலவில் அச்சிடப்பட்டு, அனுப்பப்பட்டன. நம் கழக அரசு வெளியிட்ட சமச்சீர் கல்வி பாடநூல்கள்- மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில் பெரும் பாராட்டுகளைப் பெற்றன. இந்நிலையில், 2011-ஆம் ஆண்டு மே மாத மத்தியில், தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

### சமச்சீர் கல்வியின் சட்டப் போராட்டங்கள்

கழகம் ஆட்சியில் இருந்தபோதே, சமச்சீர் கல்விச் சட்டத்தைத் தள்ளுபடி செய்யக் கோரி ஒரு சில தனியார் பள்ளிகள் மற்றும் சங்கத்தினரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. அந்த வழக்குகளின் மீது, 2010-ஆம் ஆண்டு ஏப்ரல் 30 அன்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், தமிழ்நாடு அரசு பிறப்பித்த சட்டம் செல்லும் என்று சொல்லப்பட்டது.

தொடர்ந்து, சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை வழங்கக் கோரி, உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டன.

இந்நிலையில், இந்தத் திட்டம் குறித்து அ.தி.மு.க. அரசு திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. அதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அந்தச் சட்டத்தை ரத்து செய்ய உத்தரவிடப்பட்டது. மேலும் நீதிமன்றம் தனது தீர்ப்பில், “சமச்சீர் கல்விச் சட்டத்தின் நோக்கம் மிகத் தெளிவானது. சிறந்த வல்லுநர்களைக் கொண்ட ஆய்வுக் குழு விரிவாக ஆராய்ந்து சமச்சீர் கல்வி முறையை அமல்படுத்த பரிந்துரை செய்துள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை எளிதாகப் புறக்கணித்துவிட முடியாது” என்று நம் கழகம் கொண்டு வந்த திட்டத்தை அங்கீகரித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் அ.தி.மு.க அரசு மேல் முறையீடு செய்தபோது, அந்தத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதிக்க முடியாது என்றும், சமச்சீர் கல்வி பாடத் திட்டத்தில் குறைபாடுகள் இருப்பின், அதுகுறித்து ஆராய நிபுணர் குழு நியமிக்கப்பட வேண்டும் என்றும், அந்தக் குழுவின் அறிக்கையை சென்னை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கூறியது. தொடர்ந்து, அ.தி.மு.க. அரசு அமைத்த அந்த நிபுணர் குழுவில், சமச்சீர் கல்விக்கு எதிரானவர்களே இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற விமர்சனம் வந்தது. ஆனாலும், அந்தக் குழு தனது அறிக்கையை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

அதை விசாரித்த உயர்நீதிமன்றம், தனது தீர்ப்பில், “மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுவிட்ட நிலையில், சமச்சீர் கல்விச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவருவது, மாணவர்களின் நலனைப் பாதிக்கும். எனவே தமிழ்நாடு அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தம் செல்லாது. அதை ரத்து செய்கிறோம்” என்று கூறியது.

இவ்வாறு நீதிமன்றங்களின் கண்டிப்புக்குப் பிறகு, அ.தி.மு.க. அரசு சமச்சீர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று சொன்னது. ‘கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை’ என்ற கதையாக, சமச்சீர் கல்வி பாட நூல்களில் இடம் பெற்றிருந்த திருவள்ளுவர் படம் உட்படப் பல பகுதிகளை ஸ்டிக்கர் ஒட்டி மறைத்தும், கறுப்பு நிற மார்க்கர் பேனா கொண்டு அடித்தும் புத்தகங்களை வழங்கியது அம்மையாரின் அரசு. அம்மையாரின் சர்வாதிகாரப் போக்குக் காரணமாக, 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் மாணவர்கள் முதல் மூன்று மாதங்களைக் குழப்பத்திலேயே கழித்தார்கள்.

கல்வியில் சமத்துவம் என்பது நீண்ட நெடிய போராட்டத்தைக் கொண்டது என்பதற்கு நிகழ்கால சாட்சி, சமச்சீர் கல்வித் திட்டம்.

...வலம் வருவோம்

## சஞ்சீவ் பட் உடன் நிற்கும் இந்தியா!

குஜராத்தில் 2002-ஆம் ஆண்டில் நடைபெற்ற மதக் கலவரத்தை அவ்வளவு எளிதில் யாரும் மறந்துவிட முடியாது. அந்தக் கலவரங்களின்போது மோடி-அமித்ஷா கூட்டணி அரங்கேற்றிய கொடூரங்களுக்கு எதிராக சாட்சியம் அளித்தவர் அப்போது காவல்துறை அதிகாரியாக இருந்த சஞ்சீவ் பட். அது தொடர்பாக, விசாரணை அமைப்புகளிலும் மக்கள் மன்றத்திலும் நீதிக்குக் குரல் கொடுத்து வந்தார்.

இந்த நிலையில், அவர்மீது பழிவாங்கும் நடவடிக்கையாக பழைய வழக்கு ஒன்றில் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி பணி நீக்கம் செய்ததுடன், போதைப் பொருள் வழக்கு ஒன்றிலும் கைது செய்யப்பட்டு 2018-ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது முதல் அவருக்குப் பிணை மறுக்கப்பட்டு வரும் நிலையில், சமீபத்தில் உச்சநீதிமன்றம் அவரது பிணை மனுக்களுக்கு 3 லட்ச ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

நீதிக்காகப் போராடும் அவரது மனைவி, ‘X’ தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு பலராலும் பகிரப்பட்டு வருகிறது. அபராதத் தொகையை நாங்கள் செலுத்துகிறோம் என அவரது வங்கிக் கணக்குக்குப் பலரும் தொகை அனுப்புகின்றனர். நீதிக்காக என்றும் இந்தியா துணை நிற்கும்.

## ஃப்ளாஷ்பேக்



### அண்ணாவுடன் பிரச்சாரம்!

என் தாத்தா அல்ஹாஜ் எம்.மேத்தா அவர்கள் கழகம் தொடங்கப்பட்ட நாள் முதலே பேரறிஞர் அண்ணாவின் நன்மதிப்பைப் பெற்று கழகப் பணியாற்றி வந்தார்.



முகமது நயினார்

1962-ஆம் ஆண்டு கொடைக்கானலுக்குத் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள வருகை தந்த அண்ணாவுடன் என் தாத்தாவும் இணைந்து பிரச்சாரம் மேற்கொண்டார். அப்படியான தருணத்தில் இந்தப் படம் எடுக்கப்பட்டது. பின்னாட்களில் தாத்தா சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படவும் இந்தச் சந்திப்பு காரணமாக அமைந்தது. நாங்கள் பாதுகாத்து வைத்திருக்கும் அரிய படம் இது.

**-ஏ.முகமது நயினார், புகைப்படக் கலைஞர், பெரியகுளம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மாணவர்களின் பங்களிப்பு!

**1957-ஆம் ஆண்டு தேர்தலைச் சந்திக்க ஆயத்தமாவதற்கு முன், மாணவர் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றினார் பேரறிஞர் அண்ணா. “மாணவத் தோழர்கள் தங்கள் பணி என்ன எனக் கேட்டார்கள். நாட்டு மக்களுக்கு என்ன என்ன தேவை என்பதை எண்ணிப் பார்த்து, ஆராய்ந்து தலைமைக் கழகத்துக்கு அறிவிக்க வேண்டும். பல முற்போக்குக் கட்சிகளின் தேர்தல் திட்டங்களை அலசிப் பார்த்து, கழகம், இந்த நாட்டுக்கு உகந்த வகையில் எத்தகைய தேர்தல் திட்டத்தை வைக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்க வேண்டும்” எனக் குறிப்பிட்டார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 267




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.